159 உங்களுக்கு நெரிக்கும் ஆவி இருக்கிறது, அது உங்கள் கழுத்துக்கு உள்ளே இருக்கும் ஒரு கண்டமாலை (goiter). நீங்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர் அல்ல, நீங்கள் இங்கிருந்து கீழே உள்ள ஒரு இடத்திலிருந்து வந்திருக்கிறீர்கள், நீங்கள் ஃப்ளோரிடாவிலுள்ள ஓர்லாண்டோ விலிருந்து வந்திருக்கிறீர்கள். அது மிகச் சரி, **கர்த்தர் உரைக்கிறதாவது**. விசுவாசிக்கிறீர்களா?

160 "ஓ, அவருடைய கண்கள் சிட்டுக் குருவியின் மேல் இருக்கிறது, அவர் என்னைக் கவனிக்கிறார் என்று எனக்குத் தெரியும்."

161 அவரை விசுவாசிக்கிற அனைவரும், உங்கள் காலூன்றி எழுந்து நின்று அவருக்குத் துதியையும் மகிமையையும் செலுத்துங்கள். அவரை ஆராதியுங்கள், இது ஆராதனை வேளை. கர்த்தராகிய தேவன் அதை அருளுவாராக.

# கழுகு தன் கூட்டைக் கலைத்தல்

---

## THE EAGLE STIRRING HER NEST

58-0500

மாலை மே, 1958

நியூ இங்கிலாந்து, அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# செய்தி: 58-0500 - **கழுகு தன் கூட்டைக் கலைத்தல்**

மாலை வணக்கம் நண்பர்களே. கர்த்தருடைய நாமத்திலே பேசுவதற்கு இன்று இரவு இங்கே இருப்பது எனக்கு ஒரு சிலாக்கியம். நான் கவனித்தபோது, அவர்களுக்கு என் இரண்டாவது குரலில் (ஒலிபெருக்கியில்) சிறிய பிரச்சனை இருப்பதை அறிந்தேன். இது ஒரு பிரசங்கம். இதன் பின்னால் இருந்து பேசுவதற்கு யாராவது ஒருவர் இருந்தால் ஒழிய, இந்தப் பொருள் முற்றிலும் ஊமையானது; ஊழியரும் அதுபோலவே இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் அவர் மூலமாகப் பேசும் வரை அவர் ஊமையாகவே இருக்கிறார், அதன்பின்பு அது கிறிஸ்துவின் ஊழியராக மாறுகிறது.



இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்களா? அங்கே உட்கார்ந்திருக்கும் அம்மா, உங்களைப் பற்றி என்ன? நீங்கள் உங்கள் கையை உயர்த்தினீர்களா, உங்களுக்குச் சுகம் தேவைப்படுகிறதா? அங்கே கோடியில் உட்கார்ந்திருக்கும் நீங்கள், எனக்கு உங்களைத் தெரியாது, எனக்குத் தெரிந்தவரை என் வாழ்க்கையில் நான் உங்களைப் பார்த்ததே இல்லை, நீங்கள் என்னைப் பார்த்திருக்கலாம், ஆனால் எனக்கு உங்களைத் தெரியாது. தேவன் எனக்கு விளக்கி, நீங்கள் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டீர்கள் என்று எனக்குத் தெரியப்படுத்தினால்... ஏதோ ஒன்று நடந்தது, அந்தத் தூதன், அந்த ஒளி அங்கே உங்களுக்கு நேர் மேலே நிற்காவிட்டால் நான் உங்களிடம் பேசியிருக்க மாட்டேன். அதன் படத்தை நீங்கள் பார்த்தீர்களா? சரி, அதுதான் சரியாக நீங்கள் உணருகிற விதமாக உங்களை உணர வைத்துக் கொண்டிருக்கிறது, அவர் உங்களுக்கு நேர் மேலே இருக்கிறார். என் வாழ்க்கையில் நான் உங்களைப் பார்த்ததே இல்லை. அது சரி. அது அப்படியானால், உங்கள் கையை உயர்த்துங்கள், நான் உங்களுக்கு அந்நியன். [ஒலி நாடாவில் காலியிடம்]...?...

157 இங்கே உட்கார்ந்து, மிகவும் உண்மையாக என்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த இளம் பெண்ணைப் பற்றி என்ன? இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நம்புகிறீர்களா? நான் அவருடைய- அவருடைய ஊழியன் என்று நம்புகிறீர்களா? இங்கே இருக்கும் இந்த ஆவி, என் மூலமாக கிரியை செய்கிற அவருடைய ஆவி என்று நம்புகிறீர்களா? உங்களுக்கு ஜெபம் தேவைப்படுகிறது, இல்லையா? தேவனுடைய... அந்தப் பெண் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டது போலவே, நீங்களும் அவரைத் தொட்டீர்கள் என்று நான் உங்களிடம் சொன்னால். என் வாழ்க்கையில் நான் உங்களைப் பார்த்ததே இல்லை, இல்லையா? உங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால் உங்களுக்கு முதுகுத்தண்டு பிரச்சனை இருக்கிறது. அது சரி. உங்களுக்கு இருந்தது, இப்போது இல்லை. வீட்டுக்குப் போய் சுகமாயிருங்கள். ஆமென். விசுவாசிக்கிறீர்களா?

158 இந்தப் பக்கம் இருக்கும் உங்களில் சிலரைப் பற்றி என்ன? இங்கே இருக்கும் யாராவது விசுவாசியுங்கள். உங்கள் முழு



2 இப்போது, நாளை காலை காலை உணவு இருப்பதாக நினைக்கிறேன், கிறிஸ்தவர்களுக்காக என்று நான் நம்புகிறேன், அது கிறிஸ்தவர் கள்தான், அது ஊழியர்களுக்கான குறிப்பிட்ட கூட்டம் அல்ல. வழக்கமாக நான் பேசும்போது அது வணிகர்களாகவே இருப்பார்கள். அடுத்தது அவர்களுடைய கன்வென்ஷன் (மாநாடு). ஆகவே, நான் சகோதரர் வேலுக்குத் தலையசைத்தேன், ஒலி அமைப்பு சரியாக இருக்கிறதா என்று பார்க்க அவர் அங்கே பின்னால் இருக்கிறார்.

3 இப்போது, நாளை இரவு வியாதிஸ் தர்களுக்கான ஜெபம் நடைபெறும். நான் உங்களை சீக்கிரம் அனுப்பப் பார்க்கிறேன்... நான் சில நிமிடங்களுக்கு முன்பு சகோதரர் வேலிடம், நாம் சற்று தாமதமாகிவிட்டதால் என் செய்தியைப் பாதியாகக் குறைக்கப் போகிறேன் என்று சொன்னேன். ஆனால் நாளை இரவு நாம் வியாதிஸ்தர்களுக்காக ஜெபிக்கும் இரவு. ஆகவே, நாளை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, வியாதிஸ்தர்களை இங்கே வரவழையுங்கள்.

4 இப்போது, நாளை மதியம் சபையில் நடைபெறும் மதிய ஆராதனையில் ஜெப அட்டைகள் (Prayer cards) வழங்கப்படும். வெளியூரிலிருந்து வந்தவர்கள், வேலை காரணமாக வரமுடியாதவர்களுக்காக, நாளை இரவு ஆறரை மணிக்கு இங்கே சில ஜெப அட்டைகளை வைத்திருக்க நான் பையன்களை ஏற்பாடு செய்துள்ளேன். முடிந்தால், மதிய ஆராதனைக்கு வந்து அங்கிருக்கும் பையன் களிடமிருந்து ஜெப அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள், அல்லது நாளை இரவு ஆறரை மணிக்கு இங்கே உள்ள கலையரங்கத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்.

5 இப்போது, நாம் மிக விரைவாக செய்திக்குள் கடந்து செல்ல விரும்புகிறோம். காலை உணவின்போது உங்களில் அநேகரைப் பார்க்கலாம் என்று எதிர்பார்க்கிறேன்; அது உங்களுக்கு இங்கே அறிவிக்கப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். நாளை உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். அதன்பிறகு... [ஒலி நாடாவில் காலியிடம்] ...?...அங்கே நாம் கிறிஸ்தவ வணிகர்களின் சர்வதேச மாநாட்டில் ஆராதனையைத் தொடர்வோம்.



153 விசுவாசிக்கும்படி நான் உங்களுக்குச் சவால் விடுகிறேன்! அல்லேலூயா! அந்தப் பழைய தாய்க்கழுகு உங்களை அழைத்துக் கொண்டிருக்கிறது.

154 உங்களில் சிலர் நம்புகிறீர்கள், சிலர் நம்புகிறீர்கள். விசுவாசத்தினால், நம்புங்கள். பயபக்தியோடு உட்காருங்கள், அங்குமிங்கும் அசையாதீர்கள். கூட்டத்தில் யாரோ ஒருவர்...

155 அந்தச் சிறிய நபர்...?... ஆனால் உங்களுக்கும் இருதயக் கோளாறு இருக்கிறது, இன்று பயங்கரமான வலிப்பு (spell) இருந்தது...?... ஆனால் அது இருதயக் கோளாறு, ஐயா, பலவீனம், நரம்புத் தளர்ச்சி நிலை; அதை மறந்துவிடுங்கள், வீட்டுக்குப் போங்கள், சுகமாயிருங்கள்.

156 நீங்கள் வெகுதூரத்திலிருந்து வந்திருக்கிறீர்கள், இங்கே வரும் வழியில் ஏமாற்றமடைந்தீர்கள், ஏதோ ஒன்று பழுத டைந்து விட்டது. அது சரியாகிவிடும், கவலைப் படாதீர்கள். நீங்கள் நன்றாக இருப்பீர்கள். எனக்கு உங்களைத் தெரியாது, தேவனுக்குத் தெரியும்.

உங்களை பார்த்ததே இல்லை. நாம் சந்திப்பது அநேகமாக இதுவே முதல் முறையாக இருக்கும். ஆனால் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசித்தால், இருதயக் கோளாறு உங்களை விட்டு நீங்கிவிட்டது. உங்களுக்கு இருதயக் கோளாறு இருந்தது, இல்லையா? அது சரியாக இருந்தால், இதுபோல உங்கள் கையை அசைக்கவும். திரும்பிப் போய் உட்காருங்கள்.

151 அதே வேளையில், அங்கே உங்களுக்கு அருகில் உட்கார்ந்திருக்கும் அந்த மனிதருக்கும் இருதயக் கோளாறு இருந்தது, உங்களுக்கு அருகிலேயே. அது சரி. நீங்கள் நினைத்தாலும் உங்கள் வாழ்க்கையை என்னிடமிருந்து மறைக்க முடியாது. ஆனால் நான் அந்த மனிதரிடம் சொன்னபோது, அது உங்களைத் திடுக்கிடச் செய்தது, அப்போது நீங்கள் விசுவாசித்தீர்கள். அது சரி. இப்போது நீங்கள் போய் சுகமடையுங்கள், இயேசு கிறிஸ்து உங்களைச் சுகமாக்குகிறார்.

152 அது சரியாக இருந்தால், உங்கள் காலூன்றி எழுந்து நில்லுங்கள் ஐயா. அதோ இருக்கிறீர்கள்...?...



6 உபாகம புஸ்தகம், 32-ம் அதிகாரம், 11-ம் வசனத்திலுள்ள தேவனுடைய வார்த்தையின் ஒரு பகுதியை வாசிக்கிறேன்:

**கழுகானது தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, தன் செட்டை களின்மேல் அவைகளைச் சுமந்து கொண்டு போவது போல...**

7 நேற்று இரவு நான் சொன்னதுபோல, கர்த்தருக்குச் சித்தமானால், இன்று இரவு: **'கழுகு தன் கூட்டைக் கலைத்தல்'** என்பதைப் பற்றிப் பேசுவேன். இதற்கு முன்பு சில மாதங்களுக்கு முன் விர்ஜினியாவில் இதைப் பற்றிப் பேசியிருக்கிறேன், அது மிகவும் நீண்டதாக இருந்தது என்று எனக்குத் தெரியும், அதனால் சில முக்கியக் குறிப்புகளைப் பற்றி மட்டும் பேச முயற்சிக்கிறேன்.

8 ஆனால் இயற்கையில் ஏதோ ஒன்று இருக்கிறது, நீங்கள் இயற்கையைப் பார்த்தால், நீங்கள் தேவனைக் காண்பீர்கள். தேவன் தம்முடைய பிரபஞ்சத்திலும், தம்முடைய ஜனங்களிலும், தம்முடைய வார்த்தையிலும்,

தம்முடைய குமாரனிலும் வாசம் பண்ணுகிறார்; அவர் தம்முடைய மலர்களிலும் வாசம் பண்ணுகிறார், அவர் எல்லாவற்றிலும் வாசம் பண்ணுகிறார், தேவன் சர்வலோகத்திலும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர்.

9 இப்போது, கழுகைப் பற்றி நினைக்கும் போது, தேவன் ஏன் தமது சுதந்திரத்தை ஒரு கழுகுக்கும் ஒப்பிட்டார் என்று நான் அடிக்கடி யோசித்திருக்கிறேன். நானே ஒரு பண்ணை யாராக (rancher) இருந்தபடியாலும், கழுகின் குணாதிசயங்களைக் கவனிப்பதாலும், அது என் ஆர்வத்தைத் தூண்டியது. நான் இயற்கையை எப்படி படித்தேன் என்றால், இயற்கைதான் என் முதல் வேதாகமமாக இருந்தது, வேதாகமத்தில் ஒரு வார்த்தையை அறிவதற்கு முன்பாகவே.

10 எனக்கு இருபத்தியோரு வயதாக இருந்தபோது, ஒரு நபர் என்னிடம் யாக்கோபு 5:14-ஐ வேதாகமத்தில் பார்க்கச் சொன்னார், ஆனால் அதைத் தேடுவதற்கு நான் ஆதியாக மத்தில் பார்த்துக் கொண்டிருந்தேன், இருபத்தி யோரு வயதில். இருபத்திரண்டு வயதில், நான் மிஷனரி பாப்டிஸ்ட் சபையில் அபிஷேகம் பண்ணப்பட்ட பாப்டிஸ்ட் ஊழியராக இருந்



கிரியை செய்ய வேண்டும், அவரே பரிசுத்த ஆவியானவர்.

149 இப்போது வியாதியாயிருக்கிற நீங்கள், ஜெபம் பண்ணுங்கள். நாளை இரவு வழக்கமான சுகமளிக்கும் இரவாக இருக்கும், இன்று இரவும் அப்படியே.

150 இதோ. ஆம், ஐயா. ஒரு நிமிடம் அங்கே நில்லுங்கள், இங்கே வந்திருக்கிற நீங்கள். எனக்கு உங்களைத் தெரியாது. நிச்சயமாக உங்களிடம் ஜெப அட்டை இல்லை, அது என்னவென்று கூட உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். நான் அவருடைய ஊழியன் என்று நம்புகிறீர்களா? உங்கள் பிரச்சனை என்னவென்று கிறிஸ்து எனக்கு வெளிப்படுத்தினால், அதை ஏற்றுக் கொள்வீ ர்களா, நீங்கள் சுகமாவீர்கள், அல்லது உங்களுக்கு என்ன தேவையோ அது நடக்கும் என்று விசுவாசிப்பீர்களா? மேலும், உங்களுக்குத் தெரியும், அங்கே உட்கார்ந்து என்னைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, இப்போது ஏதோ ஒன்று நடந்து கொண்டி ருக்கிறது. அது சரியாக இருந்தால், உங்கள் கையை உயர்த்துங்கள். என் வாழ்க்கையில் நான்

தேவன் என்றும், நான் அவர்களுக்கு சத்தியத்தைச் சொல்கிறேன் என்றும் அவர்கள் அறியும்படி அது செய்யப்படுவதாக. ஒரு ஊழியர் செய்யவேண்டியது போல என்னால் ஒரு பிரசங்கத்தைச் செம்மைப்படுத்த முடியாமல் இருக்கலாம், ஆனால், ஆண்டவரே, நான் உம்மை அறிந்திருக்கிறேன். ஆண்டவரே, நீர் உதவி செய்ய இங்கே இருக்கிறீர் என்று நான் அறிவேன், இப்போது நீர் வார்த்தையைப் பேசும், ஏனென்றால் என் பிரசங்கம் போதுமானதாக இருக்கவில்லை, நீர் உம்முடைய சொந்த வழியில் வார்த்தையைப் பேசும். இயேசுவின் நாமத்தில், எங்களை உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். ஆமென். சும்மா அமைதியாக இருந்து, விசுவாசியுங்கள்.

148 அவருடைய வஸ்திரத்தைத் தொட்ட ஒரு பெண் இருந்தாள், அவள் கூட்டத்திற்குள் சென்றாள். இயேசு திரும்பி, "என்னைத் தொட்டது யார்?" என்று கேட்டார். நான் பேசுகிற இந்தப் பரிசுத்த ஆவியானவர் இன்று அதேபோல இருக்கிறார், அவருடைய சபையில் வசிக்கிறார், அப்படியானால் அவர் அதேபோல



தேன், கர்த்தர் எனக்கு நல்லவராக இருந்தார். ஆனால் நான் இயற்கையின் வழியே தேவனைப் படித்தேன், அங்கேதான் நான் அவரைக் கண்டேன்.

11 ஒரு பூவைப் போலவே, இங்கே இருக்கும் பெண்களாகிய நீங்கள் உங்கள் பூக்களோடு இருப்பதை நான் கவனிக்கிறேன், கோடைக் காலத்தில் அவை எப்படி மலர் கின்றன, பின்னர் மரணம் அவற்றைத் தாக்குகிறது, அவை தங்கள் சிறிய தலைகளைத் தாழ்த்தி, தங்களுக்குள் இருக்கும் உயிரை விட்டு விடுகின்றன, இதழ்கள் உதிர்ந்துவிடுகின்றன, ஒரு சிறிய கருப்பு விதை வெளியே விழுகிறது, பின்னர் அவைகளுக்கு ஒரு ஈமச்சடங்கு ஊர்வலம் நடக்கிறது. அது உங்களுக்குத் தெரியுமா? தேவன் தம்முடைய பூக்களுக்காக ஒரு ஈமச்சடங்கு ஊர்வலத்தை வைத்திருக்கிறார், நிச்சயமாக: இலையுதிர் கால மழைகள் வந்து பெரிய கண்ணீரைச் சிந்தி, அந்தச் சிறிய கருப்பு விதையைப் புதைக்கின்றன, பின்னர் குளிர்ந்த குளிர்காலம் வருகிறது, உறைந்துபோகிறது, சதைப்பற்று மறைந்துபோகிறது, விதையிலிருந்து வெடித்து வெளியேறுகிறது.

12 வருடத்தின் வசந்த காலத்தில் அங்கே கிழங்கு இல்லை, சதைப்பற்று இல்லை, விதைகள் இல்லை, நீங்கள் கண்டுபிடிக்கக்கூடிய எதுவுமே இல்லை, ஆனாலும், அதற்குள் தேவன் ஜீவனைப் பாதுகாத்து வைத்திருக்கிறார். அந்தக் கிழக்கு சூரியன் பிரகாசித்து நிலத்தை வெப்பமாக்கத் தொடங்கும் போது, அந்தச் சிறிய ஜீவ அணுவை எந்த அறிவியலாலும் கண்டுபிடிக்க முடியாது, ஆனாலும் அது அங்கே இருக்கிறது, அது மீண்டும் உயிரிக்கிறது. ஒரு பூ மீண்டும் வாழ்வதற்கு தேவன் ஒரு வழியை உண்டாக்கியிருப்பாரானால், ஒரு மனிதன் மீண்டும் வாழ்வதற்கு அவர் எவ்வளவு அதிகமாக ஒரு வழியை உண்டாக்கியிருப்பார்?

13 சற்று காலத்திற்கு முன்பு, என்னுடைய ஒரு வயதான மெத்தடிஸ்ட் போதக நண்பருடன் நான் ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன், நான் உங்களுக்குப் பிரசங்கித்துக் கொண்டிருந்த ஒரு சிறிய பாடலை அவர் பாடுவார். அவர் ஒரு உண்மையான மெத்தடிஸ்ட், இன்றைய அநேக மெத்தடிஸ்டுகளைப் போல வெறுமனே சபைக்குச் செல்பவர் அல்ல, அவர் ஒரு



கொண்டிருந்தால் என்னால் பார்க்க முடியும், ஆனால் ஒரு மனிதன் அசைந்தால் மட்டுமே என்னால் சொல்ல முடியும், நான் அவனைப் பார்க்க வேண்டும், ஆனால் இப்போது இருக்கிற இந்த அபிஷேகத்தில், எப்படியும் அவர் இங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியும், அவர் அசையும்போது என்னால் அதைச் சொல்ல முடியும். உங்கள் தேவையோடு நீங்கள் ஜெபம் பண்ணுங்கள்.

146 நாம் நின்றுகொண்டிருக்கிற இதே இடத்தில் இப்போது தேவன், நான் உங்களுக்கு அந்நியன் என்று உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும், தேவன் தம்முடைய குமாரனில் செய்தது போல, எதைச் செய்வார் என்று அவர் வாக்குப்பண்ணினாரோ அதை இங்கே உங்களுக்காகச் செய்வாரானால், உங்களில் எத்தனை பேர் அவரை நேசிப்பீர்கள், நம்முடைய இருதயங்கள் கண்டுபிடிக்க முயற்சி செய்து கொண்டிருக்கும் கழுகு அவர்தான் என்பதை அறிந்துகொள்வீர்கள்.

147 தேவனே, நீர் அவர்கள் கைகளைப் பார்க்கிறீர், நான் உம்முடைய ஊழியன், அவர்களும் அப்படியே, ஆண்டவரே, நீர்

ஆயத்தமாகிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். ஆமென்.

144 உங்கள் இருதயத்தில் கொண்டிருக்கிற நீங்கள்... இயேசு நேற்று எப்படி இருந்தார், அந்தப் பெண் எப்படி அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள், அவர் திரும்பி அவளிடம் சொன்னார் என்பதைப் பார்க்க, சென்ற இரவு இங்கே கூட்டத்தில் எத்தனை பேர் இருந்தீர்கள்...? இங்கே இருந்தவர்கள் உங்கள் கைகளை உயர்த்துங்கள். இப்போது விசுவாசம் கொண்டு நம்புங்கள்.

145 ஓ, நான் சும்மா... என்... என்னால் உங்களுக்குச் சொல்ல முடியவில்லை. அது ஒரு காட்சி, ஒரு காட்சி அல்ல, சரீரத்தைக் கட்டுப்படுத்தும் ஐந்து புலன்கள் உள்ளன: பார்த்தல், ருசித்தல், உணர்தல், நுகர்தல் மற்றும் கேட்டல், ஆனால் ஆறாவது புலன் விசுவாசம். நீங்கள் அதைப் பார்ப்பதில்லை, ருசிப்பதில்லை, அல்லது பார்ப்பதில்லை, நுகர்வதில்லை, அல்லது கேட்பதில்லை, ஆனால் அது அங்கே இருக்கிறது. இந்த-இந்த மைக்ரோஃபோன் எனக்கு முன்பாக இருப்பதை நான் பார்ப்பது போல, இங்கே ஒரு மனிதன் நின்று



மெத்தடிஸ்ட், அவருக்கு ஒரு அனுபவம் இருந்தது.

14 நான் பெந்தெகோஸ்தே மக்களிடம் அடிக்கடி சொல்வது போல, நாங்கள் பாப்டிஸ்டுகள் பெற்ற அதே பரிசுத்த ஆவியானவரைத்தான் நீங்கள் பெந்தெகோஸ்தே மக்களும் பெற்றிருக்கிறீர்கள். கைகுலுக்கி சபையில் சேரும் அந்த வகையான பாப்டிஸ்டுகள் நாங்கள் அல்ல, நாங்கள் பீடத்தில் மண்டியிட்டு, ஒருவருக்கொருவர் முதுகில் தட்டிக்கொடுத்து, நாங்கள் கடந்து வரும் வரை ஜெபிப்போம், நாங்கள் முடிக்கும்போது எங்களுக்குள் ஏதோ ஒன்று இருந்தது. தேவனுக்குத் தெரியும், நமக்கு அது போன்ற இன்னும் அதிகமான பாப்டிஸ்டுகள் தேவை...

...பழைய பாணியிலான பாப்டிஸ்டுகள், கிருபையை மட்டும் நம்பி சுவிசேஷத்திற்கு அவமானத்தைக் கொண்டுவருகிறவர்கள் அல்ல, தேவனுடைய கிருபையை விசுவாசித்து பரிசுத்த ஆவியானவரால் அதை வாழ்கிறவர்கள்.

15 நான் இந்த வயதான மெத்தடிஸ்ட் நண்பருடன் ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டி

ருந்த போது, 'விவசாய நேரம்' (Agriculture Hour) ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. கென்டக்கியிலுள்ள லூயிஸ்வில்லியில் அவர்கள் ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள், வயலில் விளைந்ததைப் போலவே மிகத் துல்லியமான ஒரு சோள மணியை உருவாக்கக்கூடிய ஒரு இயந்திரத்தை சிறிய 4-H கிளப் தயாரித்திருப் பதாகச் சொன்னார்கள்.

16 இயந்திரம் தயாரித்த பையில் நீங்கள் கையை விட்டு, வயலில் விளைந்த பையில் கையை விட்டு, இரண்டையும் ஒன்றாகக் கலந்தால், அவற்றை வேறுபடுத்திப் பார்க்க வழியே இல்லை என்று சொன்னார்கள்; அவற்றை ஆய்வகத்திற்கு எடுத்துச் சென்று, பிளந்து பார்த்தால், இரண்டிலும் ஒரே அளவு கால்சியம், ஈரப்பதம் இருக்கிறது, தானியத்தின் இதயம் அப்படியே இருக்கிறது, எல்லாமே சரியாக... ஒன்று மற்றொன்றைப் போலவே சிறந்த கார்ன் ஃப்ளேக்ஸ் (corn flakes), கிரிட்ஸ் (grits), ஹோமினி (hominy), அல்லது வேறு எதையும் உண்டாக்குகிறது. ஆனால் அவற்றை உண்மையாக வேறுபடுத்திப் பார்க்க



கூப்பிட்டுக் கூப்பிட்டுச் சொல்வது போல, அந்தப் பெரிய பரிசுத்த ஆவியானவர், அக்கினி ஸ்தம்பம், இன்று இரவு இந்தக் கட்டிடத்தின் மேல் பறந்து, "என்னிடத்திற்குப் பறந்து வா, என் மகனே, நீ என் ஆவியினால் பிறந்தவன்" என்று தேடிக்கொண்டிருக்கிறார். கர்த்தராகிய இயேசு இங்கே இருக்கிறார்.

143 இங்கே எத்தனை வியாதிஸ்தர்கள் இருக்கிறீர்கள்? உங்கள் கையை உயர்த்துங்கள். நான் உங்களைப் பார்க்கட்டும், உங்கள் கைகளை நன்றாக உயரே உயர்த்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்களுக்கு ஜெப அட்டைகள் தேவையில்லை. தாம் தேவன் என்றும், அவர் இங்கே நம் மத்தியில் இந்தக் கட்டிடத்தில் இருக்கிறார் என்றும் உங்களுக்கு நிரூபிக்க அவர் விரும்புகிறார் என்று பரிசுத்த ஆவியானவர் இப்போது எனக்குச் சொல்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். எங்களிடம் ஜெப அட்டைகள் எதுவும் இல்லை, இன்று இரவு நாங்கள் எதையும் கொண்டு வரவில்லை, அவைகள் நமக்குத் தேவையும் இல்லை. தேவன் இப்போது ஏதோ ஒன்றைச் செய்ய

*ஏனென்றால் அவர் முதலில் என்னை நேசித்தார்*

*கல்வாரி மரத்திலே*

*என் இரட்சிப்பை சம்பாதித்தார்.*

இப்போது பாடுவோம்:

*நான் அவரை நேசிக்கிறேன், நான் அவரை நேசிக்கிறேன்*

*ஏனென்றால் அவர் முதலில் என்னை நேசித்தார்*

*கல்வாரி மரத்திலே*

*என் இரட்சிப்பை சம்பாதித்தார்.*

[டேப்பில் காலியிடம்]

*தெய்வீக இரட்சகர்;*

*நான் ஜெபிக்கும்போது என்னைக் கேளும்,*

*என் பாவங்கள் எல்லாவற்றையும் எடுத்துப் போடும்,* [ஒலி நாடாவில் காலியிடம்]

142 தாய்க்கழுகு தன் சிறுகுஞ்சின் மேல் பறந்து, "மேலே வா, அன்பே, மேலே வா, நீ ஒரு கழுகு, இது உனக்காகவே இருந்தது" என்று



ஒரே ஒரு வழிதான் உண்டு என்று அவர்கள் சொன்னார்கள், அது அவற்றைப் புதைப்பதே.

17 நான் அந்த வயதான மெத்தடிஸ்டிடம், "இப்போது, நான் உங்களை சங்கடப்படுத்த விரும்பவில்லை என்றால், என் கையைப் பிடித்துக் கொள்வது நல்லது" என்று சொன்னேன்.

18 நீங்கள் ஒரு கிறிஸ்தவனைப் போல நடிக்கலாம், ஒரு கிறிஸ்தவனைப் போல உடை அணியலாம், எல்லா வகையிலும் ஒரு கிறிஸ்தவனைப் போல பாவனை செய்யலாம், ஆனால் அந்த ஜீவ அணு உள்ளே இல்லாவிட்டால், நீங்கள் உயிர்த்தெழுதலில் ஒருபோதும் எழும்ப மாட்டீர்கள். அந்த இயந்திரத்தால் எல்லா ஈரப்பதத்தையும் கால்சியத்தையும் உள்ளே வைக்க முடியும், ஆனால் அதனால் ஜீவனை உள்ளே வைக்க முடியாது, அது தேவனுடைய வேலை மட்டுமே. நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருக்கலாம், உங்கள் சபையில் எவ்வளவு உண்மையாகவும் உத்தமமாகவும் இருக்க முடியுமோ அவ்வளவு இருக்கலாம், ஆனால் நீங்கள் மறுபடியும் பிறந்திராவிட்டால்,

உயிர்த்தெழுதலில் நீங்கள் அங்கேயே கிடப்பீர்கள். நித்திய ஜீவன், தேவனுடைய ஜீவன் மட்டுமே, பூமியின் தூளிலிருந்து அவரால் எழுப்பப்படும்.

19 ஆகவே, கழுகுகளையும் பறவை களையும் கவனிப்பதில், பல நேரங்களில் அவற்றைப் பார்ப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்திருக்கிறது. கழுகுகள் என்றால் என்ன, எத்தனை வகைகள் உள்ளன என்று நான் வாசிக்கத் தொடங்கினேன், நாற்பது வகையான கழுகுகள் இருப்பதை அறிந்து நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அந்த வார்த்தை யின் அர்த்தமே "சுமப்பவர், அல்லது அலகினால் ஊட்டுபவர்," வாயினால் என்பதுதான்.

20 அது அவரைப் போலவே இருக்கிறது, தேவன் தமது சுதந்திரத்தை கழுகுகளுக்கு, அதாவது தமது தீர்க்கதரிசிகளுக்கு ஒப்பிட்டதில் ஆச்சரியமில்லை, ஏனென்றால் அவர்கள் பிரசங் கிப்பதன் மூலம் வார்த்தையை வாயினால் ஊட்டுகிறார்கள். அவர் அவர்களைக் கழுகு களுக்கு ஒப்பிட்டதற்கு அதுதான் காரணம்: மந்தைக்கு வாயினால் உணவளிப்பது. "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி



வெளியேறிச் செல்கின்ற அனுபவம் அல்ல, ஆனால் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறப்பது என்று அர்த்தம் கொள்கிற அனுபவத்திற்கு.

140 தேவனே, பரிசுத்த ஆவியின் அலறல் இன்று இரவு அவர்கள் இருதயங்களில் ஆழமாக எதிரொலிக்கட்டும். அவர்கள் எழுந்து ஆவியினால் நிரப்பப்படுவார்களாக, என்றாவது ஒரு நாள் நீர் வரும்போது, உம்முடைய ஆவியினாலும் உம்முடைய கிருபையினாலும் அவர்கள் பரலோகத்திற்குப் பறந்து செல்வார்களாக. இயேசுவின் நாமத்தில் இதை அருளும். ஆமென்.

141 நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? இசை இல்லாமல், அல்லது, எங்களுக்கு ஒரு கார்ட் (chord) கொடுங்கள்: நான் அவரை நேசிக்கிறேன் (I Love Him). எத்தனை பேருக்கு அது தெரியும்? அதை இப்போது பாடுவோம். சரி, ஐ லவ் ஹிம், எல்லோரும் இப்போது:

*நான் அவரை நேசிக்கிறேன், நான் அவரை நேசிக்கிறேன்*

138 உங்கள் கைகளை உயர்த்தி, "தேவனே, என் கையைப் பிடித்துக்கொள்ளும், இன்று இரவு இங்கேயே என்னைத் தொடும், என்னை உன்னதங்களுக்குள் மேலே கொண்டுவாரும்" என்று சொல்லுங்கள். நிச்சயமாக, அவர் தேவன். நீங்கள் கழுகுகளின் உணவை விரும்புகிறீர்கள், அதனால்தான் நீங்கள் தெய்வீக சுகத்தை விரும்புகிறீர்கள், ஏனென்றால் அதை விசுவாசிக்கவே நீங்கள் பிறந்தீர்கள், அது உண்மையானது என்று சொல்லுகிற ஏதோ ஒன்று உங்களுக்குள் இருக்கிறது.

139 கர்த்தராகிய தேவனே, உயர்த்தப் பட்டிருக்கும் இந்தக் கைகளை பிடித்துக் கொள்ளும், பழைய கூட்டிலிருந்து அவர்களை வெளியே கொண்டுவாரும், இப்போது இங்கிருக்கிற தேவனுடைய ஆவியானவர் அவர்களை ஒரு ஆழமான நடைக்கு, ஒரு பெரிய அனுபவத்திற்கு அழைக்கிறார் என்பதை அவர்கள் அறியப்பண்ணும்; வெறுமனே ஒரு புத்தகத்தில் தங்கள் பெயரை எழுதுகின்ற, வெளியே நடந்து சென்று, ஒரு பெந்தெகோஸ்தே புத்தகத்திலோ அல்லது வேறு எந்த வகையான புத்தகத்திலோ தங்கள் பெயரை எழுதிவிட்டு



தேவனுடைய வசனத்தினாலே வரும்." ஆகவேதான், அவர் அவர்களைக் கழுகுகளுக்கு ஒப்பிடுவதற்கு அது ஒரு காரணமாக இருக்கிறது.

21 அவர் கழுகுகளோடு ஒப்பிட்டதற்கு மற்றொரு காரணம், கழுகு ஒரு விசேஷித்த பறவை, அது இருக்கும் மற்ற எந்தப் பறவையையும் விட உயரத்தில் பறக்கக்கூடும். ஓ, இங்கே அநேக மக்கள் இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும், நீங்கள் அது பருந்து (hawk) என்று நினைக்கிறீர்கள். பருந்து அதற்கு நிகரே அல்ல. ஏன், பருந்து கழுகு பறக்கும் உயரத் திற்குப் பறக்க முயற்சி செய்தால், அது காற்றில் சிதைந்துவிடும். பருந்து வெளியேறலாம்... கழுகு எந்த நேரத்திலும் பருந்தை விட்டுவிடலாம், அது மிகவும் உயரத்திற்குச் செல்லும், ஒரு பருந்தால் மூச்சுவிடக்கூட முடியாது.

22 பின்னர் மேலே ஏறுவதற்கு, அவன் வெகுதூரம் பார்க்கக் கூடியவனாக இருக்க வேண்டும் என்று அர்த்தம். பிறகு மற்றொரு விஷயம், அவன் விசேஷமாக உருவாக்கப்பட்ட பறவையாக இருக்க வேண்டும், இல்லை

யென்றால்... அவனுடைய இறகு சிறகுகள் மிகவும் இறுக்கமாக இருப்பதால், ஒரு இடுக்கி (pliers) கொண்டு அவற்றை இழுக்க முடியாது, அந்த மெல்லிய காற்றில் அவனுடைய பெரிய எடையைத் தாங்கிக்கொள்ள அவன் அப்படி இருக்க வேண்டும். எனவே அவன் மேலே செல்லும் போது, அவன் ஒரு விசேஷ பறவை யாக, விசேஷமாக உருவாக்கப்பட்ட பறவையாக இருக்க வேண்டும், இல்லையென்றால் அவன் ஒருபோதும் மேலே ஏற முடியாது.

23 ஒரு கிறிஸ்தவனும் அப்படித்தான் இருக்கிறான், அவன் சும்மா மறுபடியும் உருவாக்கப்பட்டவன், அல்லது ஏதோ ஒன்று, ஒரு வகையான பறவை சரி செய்யப்பட்டது போல அல்ல, அவன் பிறப்பால் ஒரு கிறிஸ்தவனாகப் பிறந்தவன் மற்றும் உருவாக்கப்பட்டவன், அவன் ஒரு விசேஷமாக உருவாக்கப்பட்ட பறவை. அவன் மேலே, வெகு உயரத்தில் செல்லவும், உலகத்தின் காரியங்களுக்கு மேலே எழும்பவும், தூரத்தில் வரும் காரியங்களைக் கவனிக்கவும் தேவன் அவனை வடிவமைத்தார்.



அழைத்தபோது, அவர் இன்று இரவும் அதே விதமாக இங்கே இருக்கிறார்.

136 ஒரு நிமிடம் நம் தலைகளைத் தாழ்த்துவோம். நான் உங்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன்: நீங்கள் ஒரு கழுகாக இல்லாவிட்டால், நீங்கள் ஒரு கழுகாக இருக்க விரும்புகிறீர்களா? உங்கள் கையை உயர்த்துங்கள், "தேவனே, நான் என் கையை உயர்த்தும்போது அதைப் பிடித்துக்கொள்ளும்" என்று சொல்லுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது நல்லது. அது சரி. "என்னை ஒரு கழுகாக மாற்றும் ஆண்டவரே, நான் அப்படி இருந்ததில்லை, ஆனால் நான் இருக்க விரும்புகிறேன். சபைப்பிரிவுகள் என்னைப் பிடித்துவைக்காத அந்த மண்டலத்திற்குள் நான் செல்ல விரும்புகிறேன்."

137 இப்போது உங்கள் சபைப்பிரிவிலிருந்து விலகி வாருங்கள் என்று நான் சொல்லவில்லை, நீங்கள் பாப்டிஸ்ட், மெத்தடிஸ்ட் மற்றும் பெந்தெகோஸ்தே மக்களே, நான் அதைச் சொல்லவில்லை, ஆனால் அதற்குள் ஒரு கழுகாக இருங்கள், அங்கே மற்ற கழுகுகளும் இருக்கின்றன.

களையும் பூமியையும் சிருஷ்டித்தவர், அவர் எல்லாவற்றையும் விசுவாசிக்கிறார்; இல்லாத வைகளிலிருந்து உலகத்தை அவர் உண்டாக்கினார்.

134 நீங்கள் அவருடைய பிள்ளையாக இருந்தால், அவர் சொல்லும் எல்லாவற்றிற்கும் 'ஆமென்' என்று சொல்வீர்கள், அது சத்தியம், நீங்கள் அவருடைய வார்த்தையின்மேல் நிற்பீர்கள். பரிசுத்த ஆவி உங்களுக்குள் இருந்தால், நீங்கள் அவருடைய பிள்ளை என்று அது தேவனுக்குச் சாட்சி கொடுக்கும், எந்தக் கோட்பாடுகளின் கூட்டமோ அல்லது சபைப்பிரிவோ உங்களை தேவனை விட்டு விலக்கி வைத்திருக்காது, நீங்கள் போவீர்கள், ஏனென்றால் நீங்கள் தேவனுடையவர்கள். ஓ, தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் இந்தக் கட்டிடத்தின்மேல் அலறும்போது, ஜனங்களின் மேல் அலறி, நம் மத்தியில் கிரியை செய்யும்போது!

135 இங்கே சென்ற இரவு அவர் பேசிக்கொண்டிருந்தபோது, அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கிறார் என்பதை ஜனங்களுக்குக் காண்பித்து



24 இப்போது, அவன் அங்கே தங்கியிருக்கவோ அல்லது அங்கே இருக்கும் போது ஏதாவது பிரயோஜனமாக இருக்கவோ முடியாவிட்டால், அவன் மேலே ஏறுவதில் பயனில்லை. அப்படித்தான் தீர்க்கதரிசியும் இருக்கிறார், பிரசங்கியாரும், ஆவியில் ஏறக்கூடியவர், எதற்கும் மேலாக வெகுதூரம், ஏவுதலின் உயரங்களில் வெகு உயரத்தில் செல்லக்கூடியவர். தேவனுடைய உண்மையான ஊழியர் மிகவும் உயரத்தில் ஏறக்கூடும், சாதாரண மனதினால் அவரைப் பின் தொடரக் கூட முடியாது, ஏனென்றால் அவர் விசேஷமாக உருவாக்கப்பட்ட பறவை. ஓ, அதை நினைப்பதில் நான் எவ்வளவு அன்புகூருகிறேன்!

25 எப்படியும், நான் விரும்பாத காரியங்களிலிருந்து சற்று வித்தியாசமாக இருக்க நான் எப்போதும் விரும்புகிறேன், நான் உலகத்தையோ, அல்லது உலகத்தின் காரியங் களையோ விரும்புவதில்லை. மேலும் அவர்கள் வித்தியாசமாக உருவாக்கப்பட்டிருக்கிறார்கள், சும்மா வித்தியாசமாக உண்டாக்கப் பட்டிருக் கிறார்கள் என்பதை அறிவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

26 இப்போது, உங்களுக்குத் தெரியும், தரையில் ஓடித்திரியும் சிறிய ரென் (wrens) பறவைகள், மற்றும் ஒரு பிணந்தின்னி கழுகு (buzzard) மேலே எழும்பலாம், ஆனால் அதனால் ஒருபோதும் ஒரு கழுகைப் பின்தொடர முடியாது, அது செத்துவிடும். உலகத்தின் காரியங்களுக்கு மேலே, வெகு உயரத்தில் ஏறக்கூடிய சில கழுகுகளை தேவன் வைத்திருப்பதற்காகவும், அதைச் செய்வதற்கு அவர் ஒரு விசேஷ பறவையாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

27 பின்னர் நான் மீண்டும் கவனித்தேன், அவன் மேலே ஏறுவதற்கும், ஒரு விசேஷ பறவையாக இருப்பதற்கும் காரணம், அவன் ஒரு விசேஷ பறவையாக இருக்க விரும்பியதால் அல்ல, ஆனால் தேவன் அவனை ஒரு விசேஷ பறவையாக உண்டாக்கினபடியால்; அவன் ஒரு விசேஷ பறவையாகப் பிறந்தபடியால் அவன் ஒரு விசேஷ பறவையாக இருக்கிறான். அநேக வெதுவெதுப்பான சபை அங்கத்தினர்களால் ஆவிக்குரிய காரியங்களில் ஒரு உண்மையான கிறிஸ்தவனைப் பின்தொடர முடியாததற்கு



அந்தப் பழைய தாய் மீண்டும் கடந்து சென்றாள், அவள் சொன்னாள், "ஜூனியர், உன்னால் அதைவிட உயரே குதிக்க முடியாவிட்டால், என்னால் உன்னைத் தூக்க முடியாது."

132 உங்கள் ஸ்தாபனத்தை விட நீங்கள் உயரே வர வேண்டும். இயற்கைக்கு அப்பாற்பட்டதற்குள், தேவனுடைய பரிசுத்த ஆவிக்குள் வெளியே வாருங்கள், நீங்கள் கழுகுகளாக இருந்தால். தேவன் உங்கள் இருதயத்தை ஆசீர்வதிப்பாராக, சகோதரனே. நீங்கள் வைத்திருக்கிற எல்லாவற்றையும் விட்டு விடுங்கள், உங்களால் பறக்க முடியும்...?... அவள் அலறலைக் கேட்பீர்களானால். ஆமென்.

133 கழுகுகள் கழுகுகளின் உணவைச் சாப்பிடுகின்றன. அல்லேலூயா! உங்களால் ஒரு கோழியாக இருக்க முடியாது, ஒரு கோழியால் ஒரு கழுகாக இருக்க முடியாது. நீங்கள் கழுகுகளாக இருக்கும்படி தேவனால் முன்குறிக்கப்பட்டவர்கள், நீங்கள் கழுகுகளாக இருக்கப் பிறந்தவர்கள், நீங்கள் கழுகு குடும்பத்தின் ஒரு பகுதி. உங்கள் ஆவி தேவனிடமிருந்து வந்தது, அவரே வானங்

130 "இல்லை, என்னுடைய கோழிகளுக்கு நடுவே அந்த மதவெறியை ஆரம்பிக்காதே. இங்கே அவர்களுக்கு அந்தக் காரியங்களைப் போதிக்க ஆரம்பிக்காதே, நாங்கள் உடனே உன்னைச் சபையை விட்டு நீக்கிவிடுவோம்." உங்களுக்குத் தெரிவதற்கு முன்பாகவே, அங்கே மற்றொரு எழுப்புதல் வந்தது, கழுகு மேலே பறந்து வந்தது, அவள் சொன்னாள், "நீ அங்கே! நீ ஒரு கோழி அல்ல, நீ என்னுடையவன்! மேலே எழும்பு."

131 அவன் சொன்னான், "அம்மா, நான் எப்படி அங்கே வருவது? நான் இங்கேதான் இருக்க வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள்." அவள், "சும்மா குதித்து உன் சிறகுகளை அடித்துக்கொள் அன்பே, நான் உன்னைப் பிடித்துக்கொள்வேன்" என்றாள். ஆகவே அந்தச் சிறிய ஜூனியர் ஒரு குதி குதித்து, தன் சிறகுகளை அடித்தான், அவன் பண்ணை முற்றத்தின் கம்பத்தின்மேல் மோதினான், சரியாக ஒரு பெந்தெகோஸ்தே ஸ்தாபனத்தின் நடுவில், பாப்டிஸ்ட் சபையிலிருந்து நேராக வெளியேறி, ஒரு பெந்தெகோஸ்தே ஸ்தாபனத்திற்குள் விழுந்தான்.



அதுவே காரணம், அவன் ஒருபோதும் மறுபடியும் பிறக்கவில்லை, அந்த நோக்கத்திற்காக அவன் வடிவமைக்கப் படவில்லை. அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதில் ஆச்சரியமில்லை, அவனால் பார்க்கக் கூட முடியவில்லை.

28 கழுகைப் பற்றி மற்றொரு விஷயம், கழுகு தன் இளமையை புதுப்பிக்கிறது, தன் பலத்தையும் தன் இளமையையும் புதுப்பிக்கிறது. அது சபையை மீண்டும் குறிக்கிறது, ஏனென்றால் ஒரு மனிதன் பின்வாங்கி தேவனை விட்டு விலகியிருக்கலாம், அவனை எங்காவது ஒரு நல்ல எழுப்புதலில் வையுங்கள், அவன் தன் உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்கிறான், தன் இளமையைப் புதுப்பித்துக் கொள்கிறான், அவன் தேவனிடம் திரும்பி வருகிறான், அவன் கழுவப்பட்டு மீண்டும் செல்லத் தயாராக இருப்பது போல உணருகிறான். கழுகு அப்படித்தான் செய்கிறது, அது வயதாகிறது, அதன் பழக்கவழக்கங்கள் மற்றும் காரியங்கள் தோல்வியடையத் தொடங்குகின்றன, அதனால் இனி நன்றாகப் பார்க்க முடிவதில்லை, பின்னர் திடீரென்று,

அதற்கு ஏதோ நடக்கிறது, அது மீண்டும் ஒரு இளம் பறவையைப் போல மாறுகிறது.

29 ஏன், நான் சென்ற முதல் பெந்தெகோஸ்தே கூட்டத்தை நான் நினைவு கூருகிறேன், அது இண்டியானாவிலுள்ள மிஷாவாகாவில் நடந்தது. மேடையில் சுமார் ஐந்நூறு பிரசங்கிகள் இருந்தார்கள், அவர்கள், "நாங்கள் இங்கே உள்ள ஒவ்வொரு மனிதனும் எழுந்து நின்று, அவன் எந்தச் சபையைச் சேர்ந்தவன், அவன் பெயர் என்ன என்று சொல்ல விரும்புகிறோம்" என்றார்கள்.

30 நான் சும்மா எழுந்து நின்று, "சுவிசேஷகர், வில்லியம் பிரான்ஹாம், பாப்டிஸ்ட்," என்று சொல்லி அமர்ந்தேன்; அவர்கள் எல்லோரும் முடித்தார்கள். அன்று, அநேக இளம் பிரசங்கிகள் பிரசங்கிப்பதை நான் கவனித்துக் கொண்டிருந்தேன், அவர்களுடைய செய்தியை நான் கேட்டேன். அவர்கள் சற்றே இரைச்சலாக இருப்பதாக நான் நினைத்தேன், ஆனால் உங்களுக்குத் தெரியும், நீங்கள் சற்றே இரைச்சலாக இல்லாவிட்டால், நீங்கள் செத்திருக்கிறீர்கள் என்பதற்கு அது ஒரு அடையாளம். உங்கள் மார்க்கத்தில் கொஞ்சம்



உலகத்தின் காரியங்களிலிருந்து உங்களைப் பிரித்துக்கொள்ளுங்கள்."

127 அந்தப் பழைய கழுகு சொன்னது, "ஏய், அது உண்மையாகத் தொனிக்கிறது."

128 ஒருவேளை அவன் சபைக்குச் சென்றிருக்கலாம், அவர்களில் சிலர் சத்தமிட்டார்கள், யாரோ ஒருவர், "ஆமென்! தேவனுக்கு மகிமை! அல்லேலூயா!" என்று சொன்னார். "அது சரியாகத் தொனிக்கிறது." அது அவனுடைய சுபாவத்திற்குப் பொருந்தியிருந்தது, பார்த்தீர்களா, அவன் ஆரம்பத்திலிருந்தே ஒரு கழுகாக இருந்தான்.

129 என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? அவன் தன் சிறிய தலையைத் திருப்பி, மேலே பார்க்கத் தொடங்கினான், சுற்றிலும் பார்த்தான், "நிச்சயமாக, நான் அங்கேதான் இருக்க வேண்டும், ஆனால் மற்றவர்கள் யாரும் மேலே போவதில்லையே" என்று சொன்னான். அவன் அந்தப் பழைய தாய்க்கோழியிடம், "யாராவது அங்கே மேலே போக முடியுமா?" என்று கேட்டான்.

அசிங்கமான பறவையாக, மற்றவர்களை விட மிகவும் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்றும் அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

125 அப்போது அந்தப் பழைய தாய் (கழுகு) பண்ணை முற்றத்தின் மேல் பறக்க நேர்ந்தது, அது தன் குஞ்சு என்று அவளுக்குத் தெரிந்தது, அவள் அலறினாள், "மகனே, நீ ஒரு கோழி அல்ல, நீ என்னுடையவன்!"

126 ஓ, நான் அதைக் கேட்டபோது எனக்கு நினைவிருக்கிறது! உங்களுக்கு நினைவிருக் கிறதா? "அந்தக் குப்பையிலிருந்து வெளியே வாருங்கள்! அவர்கள் நடுவிலிருந்து வெளியே வந்து, பிரிந்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். தீட்டானதைத் தொடாதிருங்கள், நான் உங்களை ஏற்றுக்கொள்வேன். நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமா யிருப்பீர்கள், நான் உங்களுக்குத் தேவனாயி ருப்பேன். அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படாதிருங்கள், அதிலிருந்து வெளியே வாருங்கள்." வெளியே வரும் காலம் என்று ஒன்று இருந்திருக்குமானால், அது இப்பொழு தாகத்தான் இருக்க வேண்டும். "வெளியே வந்து



உணர்ச்சி இல்லாவிட்டால், உணர்ச்சி இல்லாத எதுவும் செத்திருக்கிறது என்று நான் உங்களுக்கு நிரூபிக்க முடியும். அது சரி.

31 ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றபோது, அவர்கள் ஒரு மாததுளம் பழத்தையும் ஒரு மணியையும் வைத்தார்கள், எப்போது... அவர் உள்ளே சத்தம் எழுப்பியதால் தான் அவர் இன்னும் உயிரோடு இருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும் ஒரே வழி அதுதான். எப்போதாவது ஒருமுறை ஒரு நல்ல 'ஆமென்' கேட்பது, அல்லது எங்கேயோ இன்னும் ஜீவன் இருக்கிறது என்பதற்குச் சாட்சியளிக்கும் ஏதோ ஒன்றைக் கேட்பதுதான், சபை உயிரோடு இருக்கிறதா என்று சொல்லக்கூடிய ஒரே வழியாக இருக்கிறது.

32 அன்று இரவு எனக்கு நினைவிருக்கிறது, அவர்கள் ஒரு வயதான பிரசங்கியை அங்கே அழைத்தார்கள், அவருக்கு சுமார் எண்பது வயது இருக்கும், மேடைக்கு வர அவருக்கு உதவ வேண்டியிருந்தது, ஒரு சிறிய பருத்தி விளிம்பு (rim of cotton) போல இருந்தது, அவர் ஒரு வயதான நீக்ரோ பிரசங்கி, இது போல ஒரு சிறிய பருத்தி விளிம்பு, மற்றும் மிகப் பெரிய

பழைய, அந்த பழைய ஃபெல்ட்-காலர் (felt-collar), பிரீச்சர், புறா வால் போன்ற கோட்டுகளில் (pigeon-tailed coats) ஒன்று, நாங்கள் அவற்றை அப்படி அழைப்போம். அங்கே மேடைக்கு நடந்து வந்தார், அதை மேலே போட்டார், அந்தப் பெரியவரால் பேசக்கூட முடியவில்லை, அவர் சொன்னார், "பிள்ளைகளே..." அவர் யோபு புஸ்தகத் திலிருந்து தன் வசனப்பகுதியை எடுத்தார்: "நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கே இருந்தாய்? அவைகள் எதின்மேல் போடப் பட்டது என்று எனக்கு அறிவி. அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே?"

33 அன்று எல்லா ஊழியர்களும் கர்த்தராகிய இயேசுவின் பூமியிலிருந்த வாழ்க்கையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள், ஆனால் அவர் உலகம் தோன்றுவதற்கு சுமார் ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே அவரை எடுத்துக் கொண்டார், விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவபுத்திரர் மகிழ்ச்சியினால் ஆர்ப்பரித்தபோது, இரண்டாம்



விரும்புவதில்லை." அதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், நீங்கள் இல்லையா?

123 "அவர்கள் ஏன் அதைச் செய்கிறார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை." அப்படியானால் அவன் ஆரம்பத்திலிருந்தே ஒரு கழுகாக இருக்கிறான், அவன் ஒரு கழுகாகப் பிறந்தவன், ஒருவேளை அவன் ஒரு கோழியின் கூட்டில் பிறந்திருந்தாலும், அவன் ஒரு கழுகுதான். ஓ, என் தேவனே! அவன் ஒரு கழுகு, ஏனென்றால் அவன் ஆரம்பத்திலிருந்தே ஒரு கழுகாக இருந்தான், அவனுடைய ஜீவன் ஒரு கழுகாக இருந்தது.

124 ஆகவே அந்தப் பழைய கோழிகள் அங்கே சுற்றித் திரிந்து, இந்தப் பழைய செத்த காரியங்களில் கிளறி, பிரயோஜனமற்ற பழைய பிணங்களைத் தின்கின்றன. அந்தச் சிறிய கழுகால் அந்த உணவை தாங்கிக்கொள்ள முடியவில்லை, அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள் என்றும் அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே ஒரு நாள் அவன் பண்ணை முற்றத்தில் இருந்தபோது, ஏன் எல்லாமே அப்படிப் போய்க்கொண்டிருக்கிறது என்றும், தான் ஏன் அந்தக் கூட்டத்தில்

முடியவில்லை, அவை எருக் குவியலில் கிளறும் விதம், அவனுக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாது.

121 இங்கே கீழே இருக்கும் இந்த ஜனங்கள் சிறிய சமூக பானங்களைக் குடித்துக்கொண்டும், குதிரைப் பந்தயங்களுக்குச் சென்றுகொண்டும், ஆர்த்தர் காட்ஃப்ரே, எல்விஸ் பிரெஸ்லி மற்றும் வீ லவ் சூசி (We Love Susie) போன்றவை களைப் பார்த்துக்கொண்டும், ஜெபக் கூட்டத் திற்குச் செல்லாமல் இருக்கிறார்கள், ஒரு உண்மையான கிறிஸ்தவனால் அந்தக் காரியங்களைப் புரிந்துகொள்ள முடியாது. அவர்கள் ஒரு சத்தத்தைக் கேட்கிறார்கள்: "கொக், கொக், கொக், கொக்! இன்று இரவு இங்கே வாருங்கள், கொக், கொக், கொக், கொக், நான் அதைப் பாராட்டுவேன் என்று உங்களுக்குத் தெரியும், கொக், கொக், கொக், கொக், நாம் ஹூ லவ்ஸ் சூசி (Who Loves Susie) நாடகத்தைப் பார்க்கலாம்."

122 அந்தச் சிறிய கழுகு சொன்னது, "எனக்கு அது புரியவில்லை. என்னிடம் ஏதோ ஒன்று இருக்கிறது, அதைச் செய்ய



வருகையில் அவரை கிடைமட்ட வானவில்லில் (horizontal rainbow) கீழே கொண்டு வந்தார்.

34 அவர் மேடையில் சுமார் ஐந்து நிமிடங்கள் இருந்திருப்பார், உடனே காற்றில் குதித்து, தன் குதிகால்களை ஒன்றாக தட்டி, "மகிமை!" என்றார். "நான் பிரசங்கிக்க உங்களுக்கு இங்கே போதுமான இடம் இல்லை!" என்றார். ஒரு சிறு பிள்ளையைப் போல அங்கிருந்து குதித்துச் சென்றார்.

35 எனக்கு சுமார் இருபத்து மூன்று வயது இருக்கும், நான் சொன்னேன், "அதுதான் எனக்கு வேண்டும்! அது ஒரு வயதான மனிதரை அப்படிச் செய்ய வைக்குமானால், ஒரு இளைஞனான எனக்கு அது என்ன செய்யும்? எனக்கு அதில் கொஞ்சம் வேண்டும்." ஓ, அது எல்லோருக்கும் உரியது என்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!

36 ஆகவே கழுகு தன் இளமையைப் புதுப்பிக்கிறது.

**கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து; கழுகுகளைப்போலச் செட்டைகளை**

அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.

37 ஓ, கர்த்தர் அந்த உதாரணங்களை நமக்கு எப்படிக் கொடுக்கிறார்!

38 இப்போது, கழுகு கொண்டிருக்கும் மற்றொரு விஷயம், அது தன் குஞ்சுகள் காயப்படுவதை அனுமதிக்கக் கூடாது என்ற லட்சியங்களைக் கொண்ட ஒரு பறவை, அது பாறைகளில் வெகு உயரத்தில் தன் கூட்டைக் கட்டுகிறது, அங்கே தன் குஞ்சுகளுக்காகத் தன் கூட்டைக் கட்டுகிறது. மற்ற பறவைகள் எவ்வளவு வித்தியாசமாக இருக்கின்றன, அவை எப்படித் தாழ்வான இடங்களில் தங்கள் கூட்டைக் கட்டுகின்றன, ஆனால் கழுகு தன் கூட்டைக் கட்ட உயரத்திற்குச் செல்கிறது.

39 சிறிது காலத்திற்கு முன்பு நான் சின்சினாட்டி, ஓஹியோவில் மிருகக்காட்சி சாலைக்குச் சென்றிருந்தேன். எனக்கு இரண்டு சிறிய பெண் பிள்ளைகளும் ஒரு பையனும் இருக்கிறார்கள், நான் சிறு பிள்ளைகளை எவ்வளவு நேசிக்கிறேன்! நான் அவர்களை



118 ஏறக்குறைய, அப்படித்தான் நீங்கள் அவர்களைச் சபையில் பெறுகிறீர்கள், ஒரு அடையிலிருந்து (setting) சுமார் ஒன்று. அது சரி. அவன் ஒரு விசித்திரமான தோற்றமுடைய பறவையாக இருக்கலாம், ஆனால் அவன் ஒரு கழுகு.

119 "ஓ, நாங்கள் பெண்கள் உதவி சங்கத்திற்குப் (ladies aid society) போகிறோம்."

"நன்றி, நான் உண்மையில் போக விரும்பவில்லை."

"இன்று இரவு நீ பூல் (pool) விளையாட வரவில்லையா?"

"இல்லை என்று நினைக்கிறேன்." அவர்கள் ஒரு அடையிலிருந்து ஒன்றைப் போல இருக்கிறார்கள், அப்படித்தான் அவர்கள் இருக்கிறார்கள்.

120 ஆகவே, இந்தச் சிறிய கழுகைப் பார்ப்பது ஒரு விசித்திரமான விஷயமாக இருந்தது, அவன் எப்படிச் சுற்றிலும் பார்ப்பான். அந்தக் கோழிகளின் பழக்க வழக்கங்களை அவனால் கற்றுக்கொள்ள

செல்கிறாள், அவன் பறக்கக் கற்றுக்கொள்ளும் வரை அவள் அப்படித்தான் செய்கிறாள்.

116 ஓ, ஒரு கோழியுடனும், அவளுடைய குஞ்சுகளுடனும் இது எவ்வளவு வித்தியாசமாக இருக்கிறது! அவள் தன் பூமிக்குரியவைகளுடன் பண்ணை முற்றத்தில் சும்மா சுற்றித் திரிகிறாள், அவளுக்குத் தெரிந்ததெல்லாம் அவ்வளவுதான்.

117 ஒரு நாள் ஒரு நபர் ஒரு கோழியை அடை வைக்கப் போனார், அவரிடம் பதினான்கு முட்டைகள் மட்டுமே இருந்தன. ஒரு அடைக்கு (setting) எத்தனை? பதினைந்து, இல்லையா? அந்த மற்றொரு முட்டையை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை, எனவே அவர் ஒரு கழுகின் முட்டையைக் கண்டுபிடித்தார் என்று சொல்கிறார்கள். அவர் அந்தக் கழுகின் முட்டையை எடுத்து அந்தக் கோழிக்கு அடியில் வைத்தார். அவை அனைத்தும் பொரித்து வந்தபோது, அந்தக் கோழிகள் பார்த்ததிலேயே அது மிகவும் வேடிக்கையான தோற்றமுடைய ஒரு சிறிய ஜீவனாக இருந்தது.



விட்டு வெகு நாட்கள் பிரிந்திருந்து, உள்ளே வரும் ஒவ்வொரு முறையும், வீட்டிற்குள் நுழையும்போது, ஒருத்தி முதுகில் சவாரி (piggyback) செய்ய விரும்புகிறாள், அது எப்படி இருக்கும் என்று உங்களுக்குத் தெரியும், அந்தச் சிறியவர்களை நான் அவ்வளவு நேசிக்கிறேன். இப்போது ஒரு வெளிப் பாட்டிற்காக நான் அவர்களைப் பயன்படுத்தப் போகிறேன்.

40 சிறிது காலத்திற்கு முன்பு... அவர்கள் காலையில் எழுந்திருப்பார்கள், காலையில் யார் எழுந்திருக்கிறார்களோ, அவர்கள் முதலில் என் மடியில் ஏறுவார்கள். ரெபெக்கா சாராளை விட கொஞ்சம் மூத்தவள், ஆகவே, ரெபெக்கா முதலில் எழுந்து ஓடிவந்து என் காலின் குறுக்கே குதித்தாள், அவளுடைய கால்கள் நீளமாக இருந்ததால், தரை வரை தொங்கின, அவள் என்னைச் சுற்றித் தன் கைகளைப் போட்டு என்னைக் கட்டிக்கொள்ளத் தொடங்கினாள். அப்போதுதான் சிறிய பெண் அறைக்குள் வந்தாள், அவள் பார்த்தாள், ரெபெக்கா சாராளைத் திரும்பிப் பார்த்து, "சாராள், அப்பா முழுவதையும் நான்

பெற்றுக்கொண்டேன், உனக்கு எதுவுமே மிச்சமில்லை" என்று சொன்னாள்.

41 அந்தச் சிறியவள், அந்தச் சிறுமி அழுவதற்குத் தன் சிறிய உதட்டைப் பிதுக்கினாள், நான் அவளுக்குச் சைகை காட்டி என் மறு காலை நீட்டினேன், அவள் வந்து என் முழங்கால் மேல் ஏறிக்கொண்டாள், நான் என் கைகளை அவள் மேல் போட்டேன். அவள் அந்தப் பெரிய, பழுப்பு நிறக் கண்களைத் திருப்பி ரெபெக்காவைப் பார்த்து, "ரெபெக்கா, நீ அப்பா முழுவதையும் கொண்டிருக்கலாம், ஆனால் ஆனால் அப்பாவுக்கு நான் முழுமையாக இருக்கிறேன் (அப்பா என்னை முழுவதுமாகப் பிடித்துள்ளார்)" என்றாள்.

42 ஆகவே அது அப்படித்தான் இருக்கிறது சகோதரனே, நீங்கள் எல்லா இறையியலையும், எல்லாவற்றையும் கொண்டிருக்கலாம், ஆனால் கிறிஸ்து என்னம் முழுவதையும், நான் இருக்கிற எல்லாவற்றையும், ஒவ்வொரு நரம்பிலும் ஒவ்வொரு பகுதியிலும் கொண்டிருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், அவர் என்னைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று



114 ஓ, அவர் உண்மையானவர்! "அவருடைய கண்கள் சிட்டுக்குருவியின் மேல் இருக்கிறது, அவர் என்னைக் கவனிக்கிறார் என்று எனக்குத் தெரியும்." நான் சம்பிரதாயமானவனாக இல்லாமல் இருக்கலாம், நான் முற்றிலும் நிலைதடுமாறியவனாக இருக்கலாம், ஆனால் நான் எப்படியும் பறக்க முயற்சிக்கிறேன், ஒரு நல்ல பழைய பெந்தெகோஸ்தே கொண்டாட்டத்தைக் (jubilee) கொண்டிருக்கிறேன், என் பெந்தெகோஸ்தே சிறகுகளை அடித்துக்கொண்டு, என்னால் முடிந்த அளவு வேகமாக காற்றில் சிறகடித்து, எனக்குத் தெரிந்த அளவு சத்தமாக தேவனைத் துதித்துப் பாடுகிறேன்.

115 அவனும் அதே போல... ஏன்? அவன் பயப்படவில்லை, இவள் அவனுடைய தாய், அவன் ஆரம்பத்திலிருந்தே ஒரு கழுகு, அவன் பயப்படவில்லை. அவன் திரும்பினாலும், தலைகீழாக இருந்தாலும், அவன் மிகவும் அதிகமாக நிலைதடுமாறிப் போனால், அவள் நேராகக் கீழே வந்து, அவனைத் தூக்கி, திரும்பவும் நேராகக் கிருபைக்குள் சுமந்து

113 உயரத்தில், காற்றில் வெகு உயரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. இப்போது, இதிலுள்ள வேடிக்கையான பகுதி இங்கே இருக்கிறது: அவள் மேலே சென்றபோது, அவள் என்ன செய்தாள் என்று உங்களுக்குத் தெரியுமா? அவள் அவர்கள் ஒவ்வொருவரையும் தன் சிறகுகளிலிருந்து உதறித் தள்ளினாள். அவர்கள் கோழிகளாக இருக்கப் போவதில்லை, அவர்கள் பறக்க வேண்டியிருந்தது, ஆனால் அந்தச் சிறிய கழுகுகள், அவை தலைகீழாகத் திரும்பின, மேலும் கீழும் புரண்டன. என்ன விஷயம்? அவர்கள் தலைகீழாகவும், மற்ற எல்லா விதமாகவும் இருந்தார்கள், அவர்கள் கவலைப் படவில்லை, அவர்கள் பறந்து கொண்டிருந்தார்கள். அவள் அவர்களை விட்டு விலகிச் சென்றுவிடுவாள் என்று நினைக்கிறீர்களா? இல்லை ஐயா, அவள் அவர்களை ஒரு பக்கமாக வெளியே எறிந்துவிட்டு அவர்களைக் கவனிக்கத் தொடங்கினாள். ஓ, என் தேவனே! அவர்களில் ஒருவன் நிலைதடுமாறிப் போனால், அவள் அவனைத் தூக்கிக்கொள்வாள். ஆச்சரியமான கிருபை (Amazing grace) அவனைத் தூக்கி, திரும்பவும் கிருபைக்குள் மேலே உயர்த்தும்.



நான் விரும்புகிறேன். தேவன் எப்படித் தமது மகத்தான அதிசயமான கிரியையைச் செய்கிறார்!.

43 ஒரு நாள் நான் கொலராடோவில் இருந்தபோது, அங்கே நான் அதிகமாக எல்க் (elk) மான் வேட்டையாடுவேன், அது இலையுதிர் காலத்தின் ஆரம்பமாக இருந்தது, இன்னும் பனி பெய்யவில்லை, எல்க் மந்தைகள் உயரத்தில் இருந்தன. பண்ணையாரான மிஸ்டர். ஜெவரெஸூம் நானும், இப்போது பல வருடங்களாக ஒன்றாகப் பண்ணை வேலை செய்திருக்கிறோம், நாங்கள் வேட்டையாடிக் கொண்டிருந்தோம், உங்கள் நகரத்தை நீங்கள் அறிந்திருப்பது போல எங்களுக்கு அந்த நிலம் தெரியும், ஆகவே, நாங்கள் சுமார் இரண்டு நாள் பயணத் தூரத்தில் ட்ரபிள்சம் (Troublesome) நதிக்கு மேலே இருந்தோம். அன்று காலையில் நாங்கள் பிரிந்தோம், அவர், "பில்லி, நான் சில காட்டு செம்மறியாடுகளைப் பார்க்கப் போகிறேன்," மலை ஆடுகள், "நான் உன்னை மறுபக்கம் இருக்கும் எல்லை முகாமில் சந்திக்கிறேன்" என்றார், அது சுமார் எழுபத்தைந்து மைல் தொலைவில் இருந்தது, "நான் உன்னை அங்கே நாளை மறுநாள்

சந்திப்பேன், ஏனென்றால் எல்க் மான்கள் இந்தப் பகுதியில்தான் இருக்கின்றன" என்றார். நான், "சரி, ஜெஃப்" என்றேன்.

44 ஆகவே நான் மேலே, மரங்கள் வளரும் எல்லை (timber line) வரை சென்றேன், நான் என் குதிரைகளைக் கீழே பள்ளத்தாக்கில் கட்டியிருந்தேன், அவற்றை அழைத்துச் செல்ல நாளை மறுநாளோ அல்லது எப்போதோ திரும்ப வர வேண்டும். நான் நடந்து கொண்டிருந்தேன், வருடத்தின் அந்த நேரத்தில், அங்கே மழை பெய்யும், பிறகு வெயில் அடிக்கும், பிறகு பனி பெய்யும், பிறகு வெயில் அடிக்கும். அங்கே ஒரு புயல் வந்தது, நான் ஒரு மரத்தின் பின்னால் சென்று, புயல் முடியும் வரை இதுபோல நின்றேன், மழை பெய்து காற்றடித்துக் கொண்டிருந்தது. நான் அங்கே நின்று தேவன் எவ்வளவு நல்லவர் என்பதைப் பற்றியும், அங்கே மலைகளில் அவருடன் தனித்திருப்பதை நான் எவ்வளவு நேசிக்கிறேன் என்பதைப் பற்றியும் நினைத்துக் கொண்டிருந்தேன். நான் இருந்த இடத்திற்கு அருகில் மரங்கள் முறிந்து விழுந்த ஒரு இடம் (blowdown) இருந்தது,



111 பின்னர் கவனியுங்கள், இந்தப் பழைய கழுகு, நான் மீண்டும் அவளுடன் செல்கிறேன், அவள் மூன்று அல்லது நான்கு முறை கீச்சிட்டாள், உண்மையான கீச்சுக்குரலில், அவள் தன் பெரிய சிறகுகளை வெளியே விரித்தாள், அவள் அந்தச் சிறிய பறவைகளைத் தூக்கினாள், அவள் மேலே, மேலே, மேலே, மேலே சென்றாள். காற்று மெல்லியதாக மாறியது, அவர்கள் கழுகுகளாக இல்லாவிட்டால் அழிந்திருப்பார்கள், ஆனால் அவர்கள் என்னவென்று அவளுக்குத் தெரியும், அவர்கள் அவளுடைய சொந்தக் குஞ்சுகள்.

112 எடுத்து வைப்பதற்கு தேவன் உங்களுக்கு ஒருபோதும் ஒரு வாக்குத்தத்தத்தை இதில் (வேதத்தில்) கொடுப்பதில்லை, அவர் உங்களுக்குச் சுவாசத்தைச் சுவாசிக்கக் கொடுப்பார், அவர் உங்களுக்கு நிற்க ஒரு இடத்தைக் கொடுப்பார், அவர் உங்களுக்குக் கிருபையைக் கொடுப்பார், அவருடைய வாக்குத்தத்தத்தின் சிறகின்மேல் எடுத்து வையுங்கள், அவர் அதைச் செய்வாரா இல்லையா என்று பாருங்கள்.

சொன்னேன், "நான் உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்: ஏன் அந்தச் சீவல்கள் எல்லாம் போகவில்லை?".

அவர், "ஐயா, அவற்றில் சில அலுமினியம், அவை அதில் ஈர்க்கப்படவில்லை" என்றார்.

நான், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்றேன். நான், "அங்கே போகாத அந்த இரும்புத் துண்டில் என்ன பிரச்சனை?" என்று கேட்டேன்.

அவர், "அது போல்ட் (bolt) போட்டு முடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது" என்றார்.

நான் சொன்னேன், "அதுதான் விஷயம். அதுதான் விஷயம்!".

110 ஓ, காந்தசக்தி இழந்தவர்களாகவோ, அல்லது ஏதோ ஒரு கோட்பாட்டினால் போல்ட் போட்டு முடுக்கி வைக்கப்பட்டவர்களாகவோ இருக்காதீர்கள், ஆனால் அவர் வரும்போது கிறிஸ்துவுக்குள் சுதந்திரமாக இருங்கள், அப்போது அவருடைய ஆவியானவர் உங்களைத் தூக்கி, உங்களை ஒரு புதிய சிருஷ்டியாக மாற்றி, தம்முடைய சொந்த பாணியில் உங்களை வார்ப்பார்.



அங்கே ஒரு சுழல் காற்று வந்து மரங்களைக் கீழே சாய்த்திருந்தது.

45 பின்னர், புயல் சென்ற பிறகு, நான் வேதவசனங்களையும், பெரிய கூட்டங்களையும் பற்றி சிந்திக்கத் தொடங்கினேன். அப்போது மேற்கில் சூரியன் மறைந்து கொண்டிருந்தது, அந்தப் பெரிய கண் பள்ளத்தாக்கின் குறுக்கே பார்த்தது, அங்கே உயரத்தில் பசுமைமாறா மரங்கள் உறைந்து போயிருந்த இடத்தில், புயலினால் ஒரு வானவில் உருவானது.

46 ஓ, தாவீது, "ஆழம் ஆழத்தை கூப்பிடுகிறது!" என்று சொன்னார். உங்களுக்குள் தேவனை நேசிக்கிற ஏதோ ஒன்று இருந்து, தெய்வீகமான ஒன்றை உங்களால் பார்க்க முடிந்தால், ஏதோ ஒன்று உங்களைப் பிடித்துப் பற்றிக்கொள்கிறது.

47 நான் சொன்னது எனக்கு நினைவிருக்கிறது, "அதோ அவர் இருக்கிறார், யெகோவா, அந்தப் பெரிய கண் பார்க்கிறது, அதோ ஒரு வானவில், அது அவருடைய உடன்படிக்கை". நான் சொன்னேன், "புதிய ஏற்பாட்டில் நான் வாசித்திருக்கிறேன், அவர்

வச்சிரக்கல் மற்றும் பத்மராகம் போலவும், பென்யமீன் மற்றும் ரூபன் போலவும், முந்தினவரும் பிந்தினவரும் போலவும், உடன்படிக்கையாகவும், தமது தலைக்கு மேல் வானவில்லுடனும் காணப்பட்டார்".

48 அப்போது ஒரு வயதான சாம்பல் நிற ஓநாய் மலையின் மேல் ஊளையிட்டது, அதனுடைய ஜோடி பள்ளத்தாக்கில் பதில் கொடுத்தது. என் அம்மா பாதி இந்தியன் (Native American), என் மனமாற்றம் அதை என்னிலிருந்து வெளியேற்றவில்லை. ஓ, ஏதோ ஒன்று ஆழத்தை ஆழத்திற்குக் கூப்பிடத் தொடங்கியது, அந்தக் காட்டு அழைப்பு, பின்னர் மந்தையை விட்டுப் பிரிந்துபோன ஒரு வயதான ஆண் எல்க் மான் பிளிறுகிற சத்தத்தை நான் கேட்டேன், அப்போது எனக்குள் ஏதோ ஒன்று கூப்பிடத் தொடங்கியது, "ஓ தேவனே, நீர் பிரசன்னமாயிருக்கிறீர், அதோ நீர் ஓநாயின் அழைப்பில் இருக்கிறீர், இதோ நீர் எல்க் மானின் சத்தத்தில் இருக்கிறீர், அதோ நீர் வானவில்லில் இருக்கிறீர், அதோ நீர் சூரியன் மறைவதிலே இருக்கிறீர், ஆண்டவரே, நீர் எங்கும் இருக்கிறீர்!".



வெளியே சென்றன, அங்கே அவர்கள் அதை காந்தசக்தி நீக்கினார்கள், அது மறுபடியும் வார்க்கப்படுவதற்காக உள்ளே விழுந்தது. நான், "அல்லேலூயா!" என்றேன்.

அவர், "ஐயா?" என்றார்.

நான் சொன்னேன், "நான் அல்லேலூயா என்று சொன்னேன், அதற்கு 'நம்முடைய தேவனைத் துதியுங்கள்' என்று அர்த்தம்.".

அவர், "எனக்கு அது தெரியாது" என்றார்.

நான், "அந்தப் பொருள்கள் எங்கே சென்றன?" என்று கேட்டேன்.

அவர், "அது மறுபடியும் வார்க்கப் படுவதற்கும் உருவாக்கப்படுவதற்கும் சென்றது" என்றார்.

109 நான் சொன்னேன், "வேறொரு பெரிய காந்தம் ஒருநாள் வருவதைப் பற்றி நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன், அது என்னுடைய இந்தப் பழைய சடலமான சரீரத்தை எடுக்கப் போகிறது, அது இதை மறுபடியும் வார்க்கப் போகிறது." நான்

சீவல்களைத் தரையின் நடுப்பகுதிக்கு நேராகக் கூட்டித் தள்ளினான்.

105 நான், "ஐயா, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "மிஸ்டர். பிரான்ஹாம், இங்கே நில்லுங்கள், நீங்கள் ஏதோ ஒன்றைப் பார்ப்பீர்கள்" என்றார்.

106 நான், "சரி" என்றேன். நான் அங்கே நின்றேன்.

107 பிறகு... மற்றொரு சங்கு ஊதப்பட்டது, எல்லா ஆட்களும் வெளியேறினார்கள், அவர்கள் அனைவரும் வெளியேறிய பிறகு, அவர் ஒரு சிறிய பொத்தானை அழுத்தினார், தூரத்தில் ஏதோ ஒன்று வருவதை நான் கேட்டேன், "கர்ர், கர்ர், கர்ர்!".

108 நான் நினைத்தேன், "அது என்ன?" அது கீழே வந்து கொண்டிருந்தது, அது ஒரு மிகப் பெரிய காந்தம். அது அந்தத் தரையின் குறுக்கே, அந்த வரிசைக்கு நேராகக் கீழே கடந்தபோது, அந்தச் சீவல்கள் அனைத்தும் அப்படியே அதில் ஒட்டிக்கொண்டன, அவை உலைக்கு (cupola)



49 அப்போது ஒரு சிறிய பைன் அணில் (pine squirrel) குதித்து வந்ததைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன், இவ்வளவு நீளமுள்ள ஒரு சிறிய பிராணி, ஐரிஷ்காரனின் ஆந்தையைப் போல, வெறும் ஆரவாரமும் இறகுகளுமாக, அது மேலும் கீழும் குதித்து, என்னைக் கிழித்துப் போடுவது போல சத்தம் போடத் தொடங்கியது.

50 "சரி," நான் சொன்னேன், "சிறியவனே..." அந்த உண்மையான ஆழ்ந்த அழைப்பை நான் உணர்ந்தபோது நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்றால், என் துப்பாக்கியை மரத்தின் அடியில் வைத்துவிட்டு, மரத்தைச் சுற்றி சுற்றி, என்னால் முடிந்த அளவு வேகமாக ஓடி, என் குரல்வளம் மட்டும் கத்திக் கொண்டிருந்தேன். ஏன், காட்டில் யாராவது இருந்திருந்தால், அவர்கள், "ஒரு பைத்தியக்காரன் வெளியே இருக்கிறான்" என்று சொல்லியிருப்பார்கள். ஆனால் அவர்கள் என்ன நினைத்தார்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை, நான் தேவனை ஆராதித்துக் கொண்டிருந்தேன், அது மட்டுமே எனக்குக் கவலையாக இருந்தது, அவர் அங்கே இருக்கிறார் என்று

எனக்குத் தெரியும். சபையில் சத்தம் போடுகிற ஒரு நபர் மட்டும், அவருடைய சத்தங்கள் பிரயோஜனமற்றவை, நீங்கள் எங்கே தேவனைப் பார்த்தாலும், அவரிடம் உங்களை வெளிப் படுத்தி அவரை நேசிக்க வேண்டும்.

51 நான் நினைத்தேன், "சிறியவனே, நான் உன்னை பயமுறுத்தினேனா?". அவன் என்னைப் பெரிதாகக் கவனிக்கவில்லை என்பதை நான் கவனித்தேன், ஆனால் அவன் தன் சிறிய தலையைச் சாய்த்து கீழே பார்த்தான், அவன் மரங்கள் முறிந்து விழுந்த அந்த இடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். காற்றும் புயலும் ஒரு பெரிய கழுகை அங்கே கீழே இறக்கியிருந்தன, கொலராடோவில் பழுப்பு நிறக் கழுகுகள் இருக்கின்றன, அவை மிகப் பெரிய பறவைகள், அது அதை அங்கே உள்ளே தள்ளியிருந்தது, அதைத்தான் அவன் பார்த்துப் பரவசப்பட்டுக் கொண்டிருந்தான்.

52 "சரி," நான் நினைத்தேன், "ஆண்டவரே, அதுபோன்ற ஒன்றுக்காக நான் சத்தமிடுவதை ஏன் நிறுத்தினீர்?". இந்தப் பெரிய கழுகு ஒரு கிளையின் மேல் தாவிக் குதித்தது, பெரிய, சாம்பல் நிறக் கண்கள், அழகான பறவை, அது



பயணத்தை மேற்கொள்ளும்போது அவருடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்ளட்டும்.

102 சிறிது நேரத்திற்குப் பிறகு, கழுகு குஞ்சுகள் அனைத்தும் அவள் சிறகுகளின் மேல் கூடிவரும்போது... அதை நினைக்க நான் விரும்புகிறேன்.

103 சிறிது காலத்திற்கு முன்பு நான் இண்டியானாவிலுள்ள கேரி (Gary) நகரில் நின்றுகொண்டிருந்தேன், இங்கிருக்கும் சகோதரர் கோட் (Goad) அந்த ஊரைச் சேர்ந்தவர், அவர்கள் எனக்கு அந்த ஆலையை, எஃகு ஆலையைக் காண்பிக்க என்னை அழைத்துச் சென்றார்கள். நான் நினைத்தேன், "ஓ, இது அற்புதமானது! இது எப்படி இருக்கும் என்று நான் எப்போதும் ஆச்சரியப்பட்டிருக்கிறேன்.".

104 அங்கே ஒவ்வொரு மனிதனும் தன் மேஜையில் தன் கடைசல் இயந்திரங்களில் (lathes) வேலை செய்துகொண்டிருந்தான், உங்களுக்குத் தெரியும், தரையில் இரும்புச் சீவல்கள் (shavings) கிடந்தன, அப்போது ஒரு சிறிய சங்கு ஊதப்பட்டது. ஒவ்வொரு மனிதனும் தன் எஃகு வேலையிலிருந்து வந்த

எடுத்து, அந்த இறகுகளைப் பற்றிக்கொள்கிறது; ஒரு இடுக்கியைக் (pliers) கொண்டு உங்களால் அதை இழுக்க முடியாது. நிச்சயமாக முடியாது, அந்தச் சிறியவனைப் பிடித்துக்கொள்ள அது அப்படி இருக்க வேண்டும்.

101 ஓ, கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! "தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். என் கைகளில் நான் ஒன்றையும் கொண்டு வரவில்லை, வெறுமனே உம்முடைய சிலுவையை நான் பற்றிக்கொள்கிறேன்." உலகம், "ஹோலி-ரோலர், மதவெறியன், தெய்வீக சுகமளிப்பவர்," என்று அவர்கள் விரும்புகிற எதை வேண்டுமானாலும் சொல்லட்டும். எந்தச் சபையின், அல்லது எந்தக் குருவானவரின், அல்லது எந்தப் பிரசங்கியாரின் புண்ணியங்களிலும் என் நம்பிக்கைகளைத் தவறில்லாதபடி வைக்காமல், பாவம் மற்றும் மரண பிரமாணத்திலிருந்து என்னை விடுதலையாக்கின தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் தகுதிகளின்மேல் என் விசுவாசத்தை வைத்து, நான் தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்ளட்டும். நிச்சயமாக. நான் அந்தப்



அப்படியே நேராக உட்கார்ந்திருந்தது. நான் சொன்னேன், "இப்போது, அந்தக் கழுகில் நான் என்ன பார்க்க வேண்டும் என்று நீர் விரும்பினீர்? நான் அந்தக் கழுகில் உம்மைப் பார்க்க முடியும் என்று அர்த்தமா? நான் மரத்தைச் சுற்றி ஓடி ஆராதித்துக் கொண்டிருந்ததிலிருந்து நீர் ஏன் என்னை இடைமறித்தீர்?". பிறகு நான் நினைத்தேன், "சரி, அவனில் நான் பார்க்கக்கூடிய ஒரு விஷயம் இருக்கிறது, அவன் பயப்படுவதில்லை". தேவனுடைய சிருஷ்டிகள் ஒரு போதும் பயப்படுவதில்லை, நீங்கள் ஒன்றுக்கும் பயப்படுவதில்லை.

53 பிறகு, நான் மீண்டும் கவனித்தேன்... நான் அவனிடம், "நான் உன்னைச் சுட முடியும் என்று உனக்குத் தெரியுமா?" என்றேன். அவனிடம் சும்மா பேசிக்கொண்டிருந்தேன், பேசுவதற்கு அங்கே வேறு யாரும் இல்லை, அவனும், நானும், கர்த்தரும் மட்டுமே. ஆகவே நான் சொன்னேன், "நான் உன்னைச் சுட முடியும் என்று உனக்குத் தெரியுமா?" நான் என் துப்பாக்கியை எடுப்பதைப் போல பாவனை செய்தேன், அந்தப் பெரிய கண்கள் என்னைப்

பார்ப்பதை நான் கண்டேன். அவன் அந்த இறகுகளைத் தொட்டுப் பார்க்கத் தொடங்கியதை நான் கவனித்தேன், எல்லாம் இயங்கும் நிலையில் இருக்கிறதா என்று பார்ப்பது போல. தேவன் தனக்கு இரண்டு சிறகுகளைக் கொடுத்திருக்கிறார் என்பதும், அந்த இரண்டு சிறகுகளைத் தான் நம்ப முடியும் என்பதும் அவனுக்குத் தெரியும். நான் என் துப்பாக்கியை என் தோளில் வைப்பதற்குள், அவன் மரங்களின் உச்சிக்குச் சென்றுவிடுவான் என்பதும், நான் அவனை மீண்டும் பார்க்கவே மாட்டேன் என்பதும் அவனுக்குத் தெரியும், அவன் என்ன செய்து கொண்டிருந்தான் என்று அவனுக்குத் தெரியும்.

54 ஓ, நான் நினைத்தேன், "எவ்வளவு அதிகமாக, தேவன் ஒரு கழுகுக்கு இரண்டு சிறகுகளைக் கொடுத்து, அவைகளுடன் தான் எங்கே நிற்கிறோம் என்று அது அறிந்திருக்குமானால், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்துடன் ஒரு கிறிஸ்தவன் என்ன செய்ய வேண்டும்? தான் எங்கே நிற்கிறோம் என்பதை அவன் எப்படி அறிந்திருக்க வேண்டும்!".



பெரிய சிறகுகளைக் காண்பிக்கிறாள். "நான் எவ்வளவு பெரிதாக இருக்கிறேன் என்று பார்க்கிறீர்களா?" அவர்கள் அந்தக் குளிர்ந்த காற்று உள்ளே வருவதை உணருகிறார்கள்.

98 ஒரு மனிதன், தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தும்போது, பரிசுத்த ஆவியானவர் அவன் மேல் அசைவாடத் தொடங்கும்போது அப்படித்தான் இருக்கிறது, "நீர் எவ்வளவு பெரியவர், நீர் எவ்வளவு பெரியவர்!"

99 "என்னை நம்பு! உன்னால் என்னை நம்ப முடியுமா?"

100 அந்தச் சிறிய கழுகுகள் தங்கள் சிறகுகளை உதறி, "அம்மா, நான் உங்களைப் போலவே இருக்கிறேன். நான் தயார்" என்கின்றன. அவள் தன் கூட்டின் மேல் அசைவாடுகிறாள், தன் குஞ்சுகளின் மேல் சிறகடிக்கிறாள். அந்த ஒவ்வொரு சிறிய கழுகும், அவள் அந்தப் பெரிய சிறகுகளைக் கீழே போடும்போது, ஒவ்வொரு சிறிய கழுகும் மேலே ஏறி, தன் சிறிய நகங்களை அவளுடைய மிகப் பெரிய பலமான சிறகுகளுக்குள் ஆழமாகப் பதிக்கிறது, தன் சிறிய அலகை

94 இரவில் நீங்கள் எப்போதாவது திரும்பி சூரிய மண்டலத்தைப் பார்த்திருக்கிறீர்களா, அந்தச் சிறிய நட்சத்திரங்களும் நிலவுகளும் பூச்சிகளைப் போல, அவருடைய சிறகுகளில் உள்ள வெறும் தூசித் துகள்களைப் போல இருக்கின்றன? நிச்சயமாக. "நீர் எவ்வளவு பெரியவர்!"

95 மேலும், "அவரால் வியாதிஸ்தர்களைச் சுகமாக்க முடியாது" என்று சொல்லுகிறீர்களா? அது எவ்வகையான போதகராக இருப்பார்?

96 "நீர் எவ்வளவு பெரியவர்!" நீங்கள் அவரைப் பார்க்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஏன்? அவர் உங்களை ஒரு சவாரிக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறார், அவர் நல்லதை ஏதோ ஒன்றைக் கொடுக்க விரும்புகிறார், ஏனென்றால் கோழியாக இருப்பது உங்களுக்குச் சோர்வாக இல்லையா? கோழியாக இருக்க விரும்ப வேண்டாம், நாம் ஒரு கழுகாக இருப்போம்.

97 ஆகவே அவள் தன் பெரிய சிறகுகளை விரித்து, "பாருங்கள், நான் எவ்வளவு பெரிதாக இருக்கிறேன்" என்று சொல்லி, அந்த மிகப்



55 சரி, நான் அவனைக் காயப்படுத்தப் போவதில்லை என்பதை அவன் கண்டான், ஏனென்றால் நான் அவனை ரசித்தேன், ஆனால் அந்தச் சிறிய பைன் அணில், "கீச், கீச், கீச்! கீச், கீச், கீச்!" என்று சத்தமிட்டதைக் கேட்டு அவன் சோர்ந்துபோனான். கடைசியாக, அவன் இரண்டு முறை பெரிய சிறகடிப்புகளை, அல்லது தாவல்களைச் செய்தான், தன் சிறகுகளைச் சுமார் இரண்டு முறை அடித்தான், அவன் மரங்களுக்கு வெளியே வந்துவிட்டான்.

56 தேவன் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை அப்போது நான் கண்டேன். அவன் இனி சிறகடிக்கவே இல்லை, அந்தப் பெரிய, வலிமையான சிறகுகளை எப்படி விரித்து வைக்க வேண்டும் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. காற்று அங்கே ஒரு பெரிய வேகத்தில் வந்தபோது, அவன் அப்படியே அந்தக் காற்றில் சவாரி செய்து மேலே, மேலே, மேலே சென்றான், அவன் ஒரு இறகைக்கூட அசைக்கவில்லை, அவன் தன் சிறகுகளை எப்படி விரித்து வைப்பது என்று மட்டுமே அறிந்திருந்தான், அவன் அந்தச் சிறிய பைன் அணிலுக்கு அப்பால் சென்று, ஒரு சிறிய

புள்ளியாக மாறும் வரை சென்றான். நான் அங்கே நின்று ஒரு குழந்தையைப் போல அழுதேன்.

57 நான் சொன்னேன், "அதுதான் தேவனே, மெத்தடிஸ்டில் சேருவதோ, நீங்கள் பாப்டிஸ்டில் சேர்ந்து பெந்தெகோஸ்தேக்குச் செல்வதோ விஷயம் அல்ல, அது அதுவல்ல, அவருடைய விசுவாசத்தின் வல்லமையில் உங்கள் சிறகுகளை எப்படி விரித்து வைப்பது என்று அறிவதுதான், பரிசுத்த ஆவி உள்ளே வரும்போது, இங்கே செய்வது போல, அதில் சவாரி செய்து செல்லுங்கள். மேலே, மேலே, மேலே, மேலே, இந்த கீச் கீச் சத்தத்தை விட்டு விலகிச் செல்லுங்கள், 'ஓ, அற்புதங்களின் நாட்கள் முடிந்துவிட்டன. கீச், கீச்! தெய்வீக சுகம் என்று ஒன்று இல்லை. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்று ஒன்று இல்லை'". அவருடைய ஆவியின் வல்லமையில் உங்கள் விசுவாசத்தை வைத்து, பாப்டிஸ்ட், மெத்தடிஸ்ட், அல்லது பெந்தெ கோஸ்தே, அல்லது எதிலும் சேராமல், பரிசுத்த ஆவியின் வல்லமையில் சவாரி செய்து செல்லுங்கள். உங்கள் விசுவாசத்தை வெளியே வீசி, "தேவனே, நீர் இன்னும் வாழ்ந்து



முடியும். அந்தச் சிறிய கழுகு, தான் அவளை அண்ணாந்து பார்த்து, அவள் தன் வல்லமையைக் காண்பிக்கத் தொடங்கும் வரை, தனக்கு எப்பேர்ப்பட்ட ஒரு தாய் இருக்கிறாள் என்பதை ஒருபோதும் உணர்ந்திருக்கவில்லை.

92 உங்களில் அநேகர் இன்று இரவு இங்கே வியாதிஸ்தர்களாக இருக்கிறீர்கள், நீங்கள் பாப்டிஸ்டுகள், மெத்தடிஸ்டுகள் மற்றும் பிரஸ்பிடீரியன்கள், மருத்துவர் உங்களைக் கைவிட்டிருக்கலாம், மேலும் நீங்கள் பெந்தெகோஸ்தே மக்கள், ஏனென்றால் தேவன் உங்களுக்குக் காண்பிக்க முயற்சிக்கிறார், அல்லது உங்களை மேலே அழைத்துச் சென்று, தமது வல்லமையை விரித்து, "நான் எவ்வளவு பெரிதாக இருக்கிறேன் என்று பாருங்கள்!" என்று சொல்கிறார்.

93 தேவன் இந்த நாட்களில் ஒரு நாள் உங்களை ஒரு பயணத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறார், மேலும் "நீர் எவ்வளவு பெரியவர்!" (How great Thou art!) என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

90 பின்னர், சிறிது நேரத்திற்குப் பிறகு, அவள் அதை எல்லாம் செய்து, அவர்கள் எல்லாரையும் திருப்தியற்றவர்களாக்கிய பிறகு, பழைய தாய்க்கழுகு கூட்டுக்கு மேலே வருகிறது. உங்களுக்குத் தெரியும், உண்மையில், அந்தச் சிறிய கழுகு தன் அம்மா என்ன அளவுள்ள பறவை என்பதைப் பார்த்ததே இல்லை, ஆகவே அவள் கூட்டின் மேல் ஏறுகிறாள், நீங்கள் அதைப் பார்க்க வேண்டும், அது ஒரு உண்மையான நாடகம், அவள் கூட்டின் மேல் ஏறி, அவர்களிடம் கூவிக் கொண்டிருக்கிறாள், கழுகு சத்தத்துடன் அவர்களிடம் கூவுகிறாள். ஓ, அது கேட்பதற்கு நன்றாக இருக்கிறது! பிறகு அவள் தன் பெரிய சிறகுகளை விரிக்கிறாள், "நான் எவ்வளவு பெரிதாக இருக்கிறேன் என்று பாருங்கள்!"

91 அந்தச் சிறியவர்கள் சொல்லத் தொடங்குகிறார்கள், "ஓ, அம்மா, நீங்கள் எவ்வளவு பெரிய பறவை!" இப்போது, அவற்றில் சில, அந்தக் கழுகுகள் பதினான்கு அடி குறுக்களவுள்ள சிறகுகளை, சிறகு விரிப்பைக் கொண்டிருக்கின்றன; அவற்றால் ஒரு கன்றுக்குட்டியைத் தூக்கிச் சுமந்து செல்ல



அரசாளுகிறீர், நீர் அதே கர்த்தராகிய இயேசு" என்று சொல்லுங்கள். அவருடைய ஆசீர்வாதங் களில் சவாரி செய்து செல்லுங்கள், நிச்சயமாக; அவர் அதை வாக்குப்பண்ணினார்.

58 ஒரு நாள், சிறிய சாராளும் நானும் ஒரு மிருகக்காட்சிசாலையில் நடந்து கொண்டிருந் தோம், நான் பார்த்ததிலேயே மிகவும் சோகமான காட்சியை அங்கே பார்த்தேன் என்று நினைக்கிறேன், அது ஒரு கூண்டில் இருந்த கழுகு, அவர்கள் அதை அங்கே கொண்டு வந்து அதிக நாட்கள் ஆகவில்லை. அந்தப் பெரியவனுக்குத் தலைக்கு மேல் இறகுகளே இல்லை, பக்கவாட்டில் அவனுடைய சிறகுகள் எல்லாம் அடிபட்டுப் போயிருந்தன. நான் அவனைக் கவனித்தேன், அவன் தரையில் படுத்து, தலையை ஆட்டுவான், எழுந்து நிற்பான், அந்தக் கம்பிகளைப் பார்ப்பான், ஒரு ஆரம்பத்தைப் பெறுவதற்காக இப்படித் திரும்பி நடப்பான், குறுக்கே பறந்து சென்று அந்தக் கம்பிகளில் தன் தலையை மோதிக்கொள்வான், சிறகுகளை அடிப்பான், அது அவனைத் தரையில் தள்ளும். அவன் எழுந்து, வேறு எங்காவது கம்பிகளைப் பார்ப்பான், பின்னால்

நடப்பான், ஒரு ஆரம்பத்தைப் பெறுவான், இங்கே வருவான், தான் தலையை மோதிக்கொண்ட இடத்திலேயே தலையை இடிப்பான், அவன் தலையிலோ சிறகுகளிலோ இறகுகளே இல்லாத வரை அப்படிச் செய்வான். கடைசியாக அது அவனைத் தரையில் தள்ளியபோது, அவன் அங்கே கிடந்தான், அவன் வானத்தை நோக்கிப் பார்த்தபோது அவனுடைய கண்கள் சோர்ந்திருந்தன. அது என்ன? அவன் ஒரு பரலோகப் பறவை, அந்த வானங்களுக்கு மேலே பறக்கப் பிறந்தவன், இங்கே அவன் கூண்டில் அடைக்கப் பட்டிருக்கிறான், மீண்டும் சுதந்திரமாக இருக்க வழியே இல்லை.

59 நான் நினைத்தேன், அது மிகவும் சோகமான காட்சி, அந்தக் கழுகுக்கு அந்த மனிதன் கொடுத்த விலையை விட நூறு டாலர்கள் அதிகமாகக் கொடுத்திருப்பேன், அவன் அந்தக் கதவைத் திறந்து அவனை வெளியே விட என்னை அனுமதித்திருந்தால். ஓ, அந்த நீல வானங்களில் சஞ்சரிக்கப் பிறந்தவன் அவன் என்று நினைக்கும்போது, பிறகு அவன் மேலே பார்க்கிறான், அவனால் அதைச் செய்ய



இல்லையா?" என்று சொன்னான். ஒரு முள். தயாராகுங்கள், நீங்கள் ஒரு பயணம் செல்லப் போகிறீர்கள், அதை மட்டும்தான் என்னால் உங்களுக்குச் சொல்ல முடியும்; தேவன் உங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

88 போதகரிடம் சென்று, "போதகரே, நேற்று இரவு நான் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று எனக்கு ஏதோ நடந்தது, என் வாழ்க்கை மாறிவிட்டது, நான் வித்தியாசமாக உணர்கிறேன்!" என்று சொல்லுங்கள். "இப்போது, இங்கே பார், அதை எங்கள் சபையைச் சுற்றி நீட்ட (பரப்ப) வேண்டாம்" என்பார். மற்றொரு முள்.

89 நீங்கள் வெளியேற வேண்டியிருக்கும் அளவிற்கு அவர் கூட்டை மிகவும் துன்ப கரமானதாக மாற்றுகிறார், உங்களால் இனி அதைத் தாங்கிக்கொள்ள முடியாது, ஏனென்றால் உங்களால் அதைத் தாங்கிக்கொள்ள முடியா விட்டால், ஆரம்பத்திலிருந்தே நீங்கள் ஒரு கழுகாக இருக்கவில்லை என்பதை அது காட்டுகிறது.

குன்றுக்கு அப்பால் வீசுகிறாள், அவர்கள் கோழிகளாக இருக்கப் போவதில்லை என்பதில் அவள் உறுதியாக இருக்கிறாள், அவர்கள் வெளியேற வேண்டியிருக்கும் அளவிற்கு அந்தக் கூட்டை அவர்களுக்கு மிகவும் துன்பகரமானதாக மாற்றப் போகிறாள்.

86 அப்படியானால் நீங்கள் எதன்மேல் நின்றுகொண்டிருக்கிறீர்கள்? முட்கள். நீங்கள் உட்காரும் ஒவ்வொரு முறையும், அது ஒரு முள், எங்கும், அது ஒரு முள், நீங்கள் நிற்கும் இடமெல்லாம், அது ஒரு முள், தேவன் ஒரு நோக்கத்திற்காக அதைச் செய்கிறார். அந்தப் பழைய கழுகு அவர்களை அப்படி உருவாக்க விரும்புகிறாள்.

87 பலத்த காற்று உங்களைத் தாக்கி, நீங்கள் தேவனை மகிமைப்படுத்தத் தொடங்கியபோது, நீங்கள் இடித்த இடமெல்லாம் ஒரு முள்ளாக இருந்ததை நீங்கள் கவனித்தீர்களா? உங்கள் சாட்சி உலகத்தை எரித்துவிடும் என்று நீங்கள் நினைத்தீர்கள், ஆனால் உங்கள் நெருங்கிய நண்பரிடம் சொன்ன உடனேயே, அவன், "ஹூம், நீ ஒரு ஹோலி-ரோலர் (holy-roller) ஆகிவிட்டாய் என்று நினைக்கிறேன்,



முடியவில்லை, யாரோ அவனைக் கூண்டில் அடைத்துவிட்டார்கள்!.

60 அது ஒரு சோகமான காட்சி என்று நான் நினைத்தேன், ஆனால் சகோதரனே, தேவனுடைய குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் பிறக்க வேண்டிய ஆண்களையும் பெண்களையும், "அற்புதங்களின் நாட்கள் முடிந்துவிட்டன" என்று சொல்லும் சபைப்பிரிவு இறையியல் என்னும் பழைய கூண்டில் அடைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது... தேவனுடைய உண்மையான காரியத்திலிருந்து உங்களை விலக்கி வைக்க, இங்கே வெளியே சுற்றித் திரிந்து, தேவன் உங்களுக்குள் வைத்த அந்த பாக்கியமான பசியைத் திருப்திப்படுத்த முயன்று, அவர் மேல் தாகங்கொண்டு, குட்டையான ஆடைகளை (shorts) அணிவதிலும், குடிப்பதிலும், சபைகளில் சேருவதிலும், இந்த எல்லாக் கோட்பாடுகளிலும், காரியங்களிலும் அதைத் திருப்திப்படுத்த முயல்வதுதான் நான் பார்த்ததிலேயே மிகவும் சோகமான காட்சி.

61 நீங்கள் தேவனுடைய ஆண்களாகவும் பெண்களாகவும் இருக்கவும், ஆராயப்படாத

வைகளில் சஞ்சரிக்கவும், அறியாதவைகளை ஆராயவும் பிறந்தவர்கள். தேவன் உங்களை அப்படி உண்டாக்கினார், "என் சபைப்பிரிவு அற்புதங்களை நம்புவதில்லை" என்று கூண்டில் அடைக்கப்படுவதற்காக அல்ல. உங்கள் சபைப்பிரிவு என்ன செய்கிறது என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை, உங்கள் இரட்சகர் அப்படிச் சொல்லியிருக்கிறார், அதுவே முடிவானது. எந்த மனிதனும் உங்களைக் கூண்டில் அடைக்க விடாதீர்கள், உங்களுக்குக் கூண்டு தேவையில்லை, நீங்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும். நீங்கள்... நீங்கள் மேலே பார்ப்பதற்குக் காரணம், நீங்கள் ஒரு பிறந்த கழுகாக இருக்கிறீர்கள், நீங்கள் அதைச் செய்ய விரும்புவதற்குக் காரணம் தேவன் உங்களை அப்படி உண்டாக்கினார். கோழிக்கூட்டில் அடைபட்டிருக்க உங்களுக்கு முடியாது, நீங்கள் ஒரு கழுகாக, மேலே உள்ள வானங்களில் பறக்கவும், அறியாதவைகளுக்குள், ஜீவனுள்ள தேவனுடைய வல்லமைக்குள் சஞ்சரிக்கவும் உண்டாக்கப்பட்டீர்கள்.

62 நீங்கள் மற்ற பறவைகளைப் போல இருக்க உண்டாக்கப்படவில்லை, இன்று இரவு



நீங்கள் அதைப்பற்றி நினைக்க முயற்சிக்க வேண்டிய அவசியமில்லை, உங்களால் அதைத் தாங்க முடியாது என்பதில் ஆச்சரியமில்லை.

84 இப்போது, நீங்கள் ஒரு பழைய கோழியை எடுத்துக்கொண்டு நேராக மேலே பறக்கச் செய்யுங்கள், அவள் சிதைந்து போவாள், அது சரி, அவளால் அதைத் தாங்க முடியாது, அவள் ஒரு கழுகாக இருக்க வேண்டும், இல்லையென்றால் அவளால் அதைத் தாங்க முடியாது, உங்களால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாது. நீங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டதைப் புரிந்துகொள்ளவும் பார்க்கவும் முடியும் முன்பாக, நீங்கள் மறுபடியும் பிறந்திருக்க வேண்டும். அது சரி.

85 ஆகவே அந்தப் பழைய கழுகு அங்கே நின்று, அவர்களுக்குள் இருக்கும் இறகுகள் எல்லாவற்றையும் விசிறி வெளியேற்றுகிறாள். ஓ, சகோதரனே, என்ன ஒரு நேரம்! பின்னர் அவள் செய்யும் அடுத்த காரியம், அவள் உள்ளே சென்று, அந்தக் கூட்டில் தான் அடைத்து வைத்திருந்த அந்தச் சிறிய ஆட்டுத்தோல்கள் மற்றும் பொருட்களை எல்லாம் எடுத்து, தன் அலகினால் எடுத்து

மற்றும் புதிய ஏற்பாடு. இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்.

82 கன்மலையின் வெடிப்பிலே பிறந்து, எல்லா நேரமும் தங்கள் தாயினால் மூடப்பட்டிருந்த அந்தச் சிறிய கழுகுகள், முதல் முறையாக பலத்த காற்று (Mighty Rushing Wind) இறங்கி வருவதை உணரும்போது என்ன நடக்கும் என்று நினைக்கிறீர்கள்?

83 ஆனால், எப்படியோ, பெந்தெகோஸ்தே நாளில் நடந்தது போலவே, ஒரு பலத்த காற்றினால் கூட்டைக் கலைப்பதற்கு தேவனிடம் ஒரு வழி இருக்கிறது, மேலும் பெந்தெகோஸ்தே சபையிலிருந்து தளர்வான இறகுகளை விசிறி வெளியேற்றுவதற்கு, பரிசுத்த ஆவியின் மற்றொரு பலத்த காற்று நமக்குத் தேவைப்படுகிறது. அது உண்மை என்று உங்களுக்குத் தெரியும். பாப்டிஸ்ட், பிரஸ் பிடீரியன், மற்றும் உங்களில் மீதமுள்ளவர்களே, அந்தத் தளர்வான இறகுகள் விசிறி வெளியேற் றப்படுவது உங்களுக்குத் தேவை. உங்களால் ஒரு வார்த்தையும் சொல்ல முடியாது, அவை உங்கள் கழுத்தை உடைத்துவிடும். கோழிகளே,



அதுதான் விஷயம், அதற்காகத்தான் உங்கள் இருதயங்கள் பசியோடு இருக்கின்றன, அவிழ்ந்து விடுதலையாக வேண்டும், ஏனென்றால் நீங்கள் ஆரம்பத்திலிருந்தே ஒரு கழுகு.

63 ஒரு கழுகு ஆரம்பத்திலிருந்தே ஒரு கழுகாக இருக்கிறது, அவன் ஒரு கழுகாகப் பிறந்தான், அதுதான் அவனை நீதிக்காகப் பசியும் தாகமும் கொள்ளச் செய்கிறது. ஆனால், "அற்புதங்களின் நாட்கள் முடிந்துவிட்டன. ஓ, அந்த ஆவேசக்காரர்களுக்கு (fanatics) செவிகொடுக்காதீர்கள். தெய்வீக சுகம் என்று ஒன்று இல்லை. பரிசுத்த ஆவியின் ஸ்நானம் என்று ஒன்று இல்லை. அவர்கள் ஹோலி-ரோலர்கள் (holy-rollers) கூட்டமே தவிர வேறொன்றுமில்லை" என்று சொல்லும் ஒரு கூண்டில் நீங்கள் நின்றுகொண்டிருக்கும் வரை, அதை நீங்கள் நம்பாதீர்கள். நீங்கள் அதை நம்பாதீர்கள்!

64 நீங்கள் விரும்பும் எந்த நேரத்திலும் கதவைத் திறந்து, வல்லமையின் மூலமாகவும் அவருடைய ஆசீர்வாதங்கள் மூலமாகவும்

வீட்டிற்குப் பறந்து செல்லும்படி, ஒரு விலைக்கிரயம் செலுத்திய ஒரு மனிதர் இருக்கிறார், அந்த மனிதர் இயேசு கிறிஸ்து. பிசாசின் அடகுக்கடையிலிருந்து உங்களை வெளியே எடுக்கவும், கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைச் சுதந்திரமாக்கவும் அவர் மரித்தார், எனவே நீங்கள் மேலே உள்ள பரலோகங்களைத் தேடலாம்.

65 நீங்கள்... உண்டாக்கப்படவில்லை... இருந்தாலும், ஒரு கழுகு, அவன் இருக்கிற தெல்லாம், அவன் ஒரு கோழியிலிருந்து எவ்வளவு வித்தியாசமாக இருக்கிறான், ஆனால் அவை இரண்டுமே பறவைகள். ஒரு கோழி என்றால் என்ன? ஒரு கோழி அவனுடைய சபைப்பிரிவு சகோதரன், ஆனால் அவன் ஒரு கோழி. அவன் ஒரு கோழியை விட எவ்வளவு வித்தியாசமாக இருக்கிறான்! கழுகு தன்னால் முடிந்த அளவு உயரத்திற்குச் சென்று கன்மலையின் வெடிப்பில் தன் கூட்டைக் கட்டுகிறான், எந்த வேட்டையாடும் விலங்கும் தன்னிடம் வராதபடி அவன் அங்கே மேலே செல்கிறான்.



இறகுகள் எல்லாவற்றையும் விசிறித் தள்ள வேண்டும்.

80 சகோதரனே, நான் உங்களுக்குச் சொல்கிறேன், பெந்தெகோஸ்தே சபைக்கு எப்போதாவது ஒரு சிறகு-விசிறல் (wing-fanning) தேவை என்றால், அது இப்பொழுதுதான், அதிலிருந்து தளர்வான இறகுகள் எல்லாவற்றையும் அகற்ற, அது சரி, மிகவும் தளர்வானது, உலகத்தின் காரியங்களை அதிகம் செய்வது. இந்தச் சபைகள் அனைத்தும் ஒரே விஷயத்தில்தான் குற்றவாளியாக இருக்கின்றன, ஒன்று முதல் மற்றொன்று வரை.

81 கவனியுங்கள், அவள் அவர்களுக்குள் இருந்து அந்த இறகுகளை வெளியே எடுக்க வேண்டும், இல்லையென்றால், அவை தங்கள் கழுத்தை உடைத்துக்கொள்ளும், அங்கே மிகவும் அதிகமான தளர்வான இறகுகள் உள்ளன. அதைச் செய்வதற்குரிய சாதனம் அவளிடம் இருக்கிறது, அவளுக்கு இரண்டு பெரிய சிறகுகள் உள்ளன; அதைச் செய்வதற்குரிய சாதனம் தேவனிடமும் இருக்கிறது, பழைய

அழைப்பார்கள். நான் அதை பல முறை பார்த்திருக்கிறேன். அந்தப் பழைய தாய்க்கழுகு ஒரு நாள் கீழே வருவாள், இந்தச் சிறியவர்களைப் பார்ப்பாள், அவள் "சரி" என்று சொல்வாள், அவள் அவர்களை எழுந்து நிற்கச் செய்வாள், அவள் தன் கூட்டின் மேல் நிற்பாள், அவளுடைய அந்த மிகப் பெரிய சிறகுகளை எடுப்பாள், அவளால் முடிந்த அளவு வேகமாக அந்தக் கூட்டின் மேல் விசிறத் தொடங்குவாள். ஏன்? சிறிது நேரத்திற்குப் பிறகு அவள் அந்தச் சிறிய கழுகுகளை ஒரு தனித்துப் பறத்தலுக்கு (solo flight) அழைத்துச் செல்லப் போகிறாள். அவர்கள் கோழிகளாக, பூமியைச் சார்ந்தவர்களாக இருக்கப் போவதில்லை: "அற்புதங்களின் நாட்கள் முடிந்துவிட்டன. இது மற்றும் அது போன்ற எதுவும் இல்லை. மற்றும்..."

79 ஆனால் அவள் அவர்களுக்கு ஒரு தனித்துப் பறத்தலைக் கொடுக்கப் போகிறாள், அந்த இறகுகள் தளர்வாக இருந்தால், அது அவர்கள் கழுத்தை உடைத்துவிடும், எனவே அவள் அவர்களைத் தனித்துப் பறத்தலுக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பாக, தன் சொந்தச் சிறகுகளால் அவர்கள் மேலுள்ள தளர்வான



66 ஒரு உண்மையான பிரசங்கியார் தன் சபையை அப்படித்தான் கட்டுகிறார், தேவனுடைய கழுகாக, அவர் அதை வார்த்தையின் மேலும் தேவனுடைய ஆவியின்மேலும் கட்டுகிறார், எனவே அந்த, எல்லா பழைய ஃப்ளாப்பர்களும் (flappers), பழைய குட்டையான ஆடை அணிகிறவர்களும், சுருட்டுப் பிடிக்கிறவர்களும், பூல் அரங்க சூதாட்டக்காரர்களும் அதைத் தொட முடியாது. ஏனென்றால், எல்லா பழைய பிணந்தின்னிகளும், எல்விஸ் பிரெஸ்லி, ஆர்த்தர் காட்ஃப்ரே, அந்தக் கூட்டமான காரியங்கள் விலகிப் போகும்படி, அவரால் கழுகுகளை மிகவும் உயரத்திற்கு அனுப்பவும் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிறக்கவும் முடியும், ஏனென்றால் நீங்கள் கழுகுகள்...?... ஜீவனுள்ள தேவனுடைய ஆவியில் இருக்கிறது. அவர்களுடைய உயர் லட்சியம்...

67 இயேசு சொன்னார், "நீங்கள் மலையின் மேல் இருக்கிற, ஒவ்வொருவருக்கும் ஒளி கொடுக்கிற ஒரு பட்டணமாயிருக்கிறீர்கள்." தேவனுடைய உண்மையான சபை எந்த ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்திலும் நின்றுவிடாத

லட்சியத்துடன் கட்டப்பட்டுள்ளது. அது கிறிஸ்துவின் வல்லமையையும் உயிர்த்தெழுதலையும் நம்புகிறது, அவர் நம்மைச் சுற்றியிருக்கும் இந்தப் பழைய கோழிக்கூடுகளுக்கு அப்பால் சஞ்சரிக்கிறார். சரி.

68 ஒரு பழைய கோழி தன் கூட்டைக் கட்டும்... அவர்கள் உங்களை எப்படிக் கவனித்துக் கொள்கிறார்கள் என்று பாருங்கள், அவர்கள் தெளிக்கிறார்கள், அவளை வறட்சி அடையச் செய்கிறார்கள், அல்லது ஏதோ ஒரு வழியில் அவர்கள் ஒரு வகையான தெள்ளுப்பூச்சி பவுடரை, அது போன்ற எல்லா வகையான பொருட்களையும் போடுகிறார்கள், கோட்பாடுகளால் நிரப்புகிறார்கள் (indo cumated). அவை என்ன? ஒரு நடிப்பு (put-on) தவிர வேறொன்றுமில்லை, உலகத்திற்கான ஒரு இடம், வியாதிஸ்தர்களுக்கான ஒரு இடம், வருகிற எல்லாவற்றிற்கும் ஒரு இடம். சகோதரனே, தேவனுடைய ஆவியினால் பிறந்த ஒரு மனிதன், கோட்பாடுகளால் நிரப்பப்பட்டு, இந்தத் குறிப்பிட்ட வட்டத்தில் சேரவும், அந்தக் குறிப்பிட்ட வட்டத்தில் சேரவும் வேண்டியதில்லை, அவன் தேவனுடைய ஆவியினால்



தொடங்கும் ஒரு இடத்திற்கு வருகிறது. சிறிய கழுகில் இந்த இறகுகளைப் பார்க்க தாய் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறாள்! சிறிது நேரத்திற்குப் பிறகு அவை ஓரளவு பெரிய அளவிலான இறகுகளாக மாறுகின்றன. இப்போது, நினைவில் கொள்ளுங்கள், அவை ஒருபோதும் அந்தக் கூட்டை விட்டு வெளியே வந்ததில்லை. அந்தக் கிழட்டுத் தாய் கழுகு, தன் பிள்ளைகள் கோழிகளாக இருக்க மாட்டார்கள், அவை கோழிகளின் பழக்க வழக்கங்களைக் கொண்டிருக்காது என்பதில் உறுதியாக இருக்கிறாள்.

77 அதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், தேவனுடைய பிள்ளைகள், தேவன் பரிசுத்த ஆவியினால் தீர்மானித்திருக்கிறார், அவருடைய ஆவி நிறைந்த பிள்ளைகள் சம்பிரதாயமான, சபைப்பிரிவு சார்ந்த, கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களாக இருக்க மாட்டார்கள், அவர் அதில் உறுதியாக இருக்கிறார்.

78 அவர்கள் தங்கள் இறகுகளைச் சற்று வெளியே விட்ட பிறகு, ஒரு நேரம் வருகிறது, அவர்கள் அதை "கூட்டைக் கலைத்தல்" என்று

கண்காணிக்கிறாள், அவர்களுக்கு உணவளிக்கிறாள், அவர்களைப் பராமரிக்கிறாள், அவள் வெளியே சென்று ஆடுகளை எடுக்கிறாள், அவள் சென்று மீன்களை எடுக்கிறாள், அவள் அவற்றின் உணவைக் கண்காணிக்கிறாள்.

75 கழுகுகள் சாப்பிடுகின்றன, ஆவிக்குரிய கழுகுகள் ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையிலிருந்து சாப்பிடுகின்றன, "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." மனிதன் சபைப் பிரிவுகளினால் பிழைப்பதில்லை, அவன் கோட்பாடுகளினாலோ ஜெபங்களினாலோ பிழைப்பதில்லை, அவன் தேவனுடைய வார்த்தையினால் பிழைப்பான், "தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும்..." எனவே அவன் இனி உலகத்தை நேசிப்பதில்லை, அவனால் அதைத் தாங்கிக்கொள்ள முடிவதில்லை, அவன் வெளியே வந்துவிட்டான்; அவன் ஒரு பிணந்தின்னி கழுகு (buzzard) அல்ல, அவன் ஒரு கழுகு.

76 கவனியுங்கள், சிறிது நேரத்திற்குப் பிறகு இந்தச் சிறிய கழுகுகள் இறகுகளை வெளிவிடத்



பிறந்த ஒரு சுதந்திரமான மனிதன், அவன் அதில் நிற்கிறான், மற்றும் அவனைப் பார்த்துக்கொள்ள ஜீவனுள்ள தேவனைச் சார்ந்திருக்கிறான், என்ன நடந்தாலும் சரி, உங்கள் கண்கள் தேவனுக்காக வாழத் தரிசனம் பெற்றிருக்கின்றன.

69 அந்தப் பழைய கோழி தன் கூட்டைக் கட்ட வெளியே செல்லும். அவள் அவளுக்கு ஒரு கூட்டைக் கட்டுவாள், ஒரு மிகப் பெரிய கூண்டு, அதன் மேல் ஒரு பெரிய கம்பிக் கொத்து, உள்ளே வைக்கோல், அது போன்ற எல்லாவற்றையும் போடுவாள், வெறும் ஒரு வீட்டுப் பறவை, அவ்வளவுதான் விஷயம். அவள் தன் குஞ்சுகளைப் பெறும்போது, அவைகளுக்கு பரலோகக் காரியங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது.

70 ஆனால் கழுகு அதோ அங்கே உயரத்தில் ஏறி, தன் கூட்டைக் கட்டுகிறது. மலையின் உச்சியில் என் பைனாகுலர் (இருவிழிப் பெருக்கி) வழியாக எத்தனை முறை நான் அவற்றைப் பார்த்திருக்கிறேன்! நீங்கள் கழுகைக் கவனிக்க வேண்டும், அவள் தன் கூட்டைக் கட்டுவதில் எப்படிக் கவனம் செலுத்துகிறாள்,

அவள் வெளியே சென்று மிகப் பெரிய குச்சிகளை எடுத்து வருவாள், அவள் இதுபோல ஒரு சிறிய நேரான சிகரத்திற்குச் செல்வாள், மிகவும் உயரத்தில், அங்கே ஒரு பாம்பு இல்லை, எதுவும் அவளிடம் செல்ல முடியாது.

71 ஜீவனுள்ள தேவனுடைய சபை அதே வழியில் கட்டப்பட்டிருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், அது உலகத்தின் காரியங்கள் எல்லாவற்றிற்கும் மேலாகக் கட்டப் பட்டிருக்கிறது, அது அதற்கு மேலே மிகவும் உயரத்தில் இருக்கிறது, ஏனென்றால் அவர்கள் அதை இனி பார்ப்பதே இல்லை. "நீங்கள் உலகத்தையாவது, உலகத்திலுள்ளவைகளை யாவது அன்புகூர்ந்தால், பிதாவின் அன்பு உங்களுக்குள் இல்லை." அது சரி.

72 பின்னர் இந்தப் பழைய கழுகு இந்தப் பெரிய குச்சிகளை எடுத்து, அவற்றை எப்படிச் சிறிய பிளவுகளில் வைப்பாள், அவை உயரமாக வரும் வரை அவற்றைச் சுற்றிக் கட்டுவாள், பின்னர் அவள் சென்று முட்செடி கொடிகளை (brier vines) எடுத்து வந்து அவற்றைச் சுற்றிக் கட்டி, அந்தக் கூட்டை ஒன்றாக இணைப்பாள், காற்று அதை அடித்துச் செல்லாதபடி மிகவும்



இறுக்கமாக. தேவன் தமக்குச் சொந்தமான வர்களை எப்படிக் கவனித்துக் கொள்கிறார்!

73 பின்னர் அவள் வெளியே போவாள், வரப்போகிற தன் குழந்தடுகளுக்கு எல்லாம் உண்மையாகவே கதகதப்பாக இருக்க அவள் விரும்புகிறாள், எனவே அவள் ஆடுகளையோ முயல்களையோ கொல்லும்போது, அந்தப் பொருட்களை உள்ளே கொண்டு வருவாள், அவள் தன் பெரிய அலகை எடுத்து, அந்தச் சிறிய குத்துகின்ற இடங்களை எல்லாம் முயல் தோலாலும், ஆட்டுத்தோலாலும் முழுவதுமாக அடைத்து, அதை உண்மையாகவே மென்மையாகவும் கதகதப்பாகவும் மாற்றுவாள். தேவன் தமது பிள்ளைகளில் ஒருவரைத் தமது பராமரிப்புக்குள் கொண்டுவரும்போது அப்படித் தான் செய்கிறார், அவர் எப்போதும் கூட்டை கதகதப்பாக ஆக்குகிறார், உங்கள் எல்லாம்...?... எல்லாம், பாரங்கள் எல்லாம் உருண்டு போய்விட்டன, நீங்கள் மறுபடியும் பிறக்கும் போது நீங்கள் வெறும் ஒரு ஆடு, தேவன் உங்களைக் கவனித்துக் கொள்கிறார்.

74 பின்னர் அந்தச் சிறியவர்களை அவள் எப்படிக் கவனித்துக் கொள்கிறாள், அவர்களைக்